# உயர்கல்வித்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016

மானியக் கோரிக்கை எண்.20

பி.பழனியப்பன்
உயர்கல்வித்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-16 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 17-32 |
| 3. | கல்லூரிக் கல்வி | 33-50 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 51-172 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 173-175 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 176-187 |
| 7. | தேசிய உயர்கல்வித் திட்டம் (RUSA) | 188-190 |
| 8. | அறிவியல் நகரம் | 191-197 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 198-214 |
| 10. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 215-231 |
| 11. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 232-234 |
| 12. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 235-236 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# மானியக் கோரிக்கை எண்.20 – உயர்கல்வி
# 2015–2016

## முன்னுரை

**“நமது இளைஞர்களுக்கு உலகத்தரத்திலான கல்வி, நிபுணத்துவம் மற்றும் மேம்பாட்டுப் பயிற்சியை அளிக்கக் கூடிய கல்வி முறையை உள்ளடக்கிய புதிய கண்டுபிடிப்பு மையங்களாக உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்க நான் எண்ணியுள்ளேன். நூற்றாண்டுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் தமிழக உயர்கல்வித்துறை முன்னேறி வருகிறது. அதனை நோக்கிய வகையில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன”.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தின் 155ஆவது பட்டமளிப்பு விழாவின் போது ஆற்றிய உரை**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023, அனைத்துத்

துறைகளிலும் அபரிதமான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், குறிப்பாக மாநிலத்தில் கல்வியை சிறப்புத் தன்மையுடன் கூடிய பாதையில் உயர்வளர்ச்சி அடைவதையே வலியுறுத்துகிறது.

கல்வி என்பது இன்றியமையாத உந்து சக்தியாக, மனித வளர்ச்சிக்கான உத்வேகத்தை அளித்து, சமூகத்தில் திறன்வாய்ந்த தனிநபர்களையும் உருவாக்குகிறது. இத்தகைய மாற்றம், நம்முடைய மேம்பட்ட திறனுடன் கூடிய மனித வளத்தை, செயல்திறன் மிக்க பணிக்குழுவாக மாற்றுவதன் மூலம் சாத்தியப்படுவதுடன், முடிவில் தேசத்தின் வலிமையையும் கூட்டுகிறது. இந்நிலையில், கல்வியானது, தனிநபருக்கு முழு வளர்ச்சிக்கான அறநெறியை வழங்குவதையே தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

‘உயர்கல்வி’ உட்பட அனைத்து துறைகளிலும் தலைசிறந்த முன்னேற்றப் பாதையின் தலைமையை

முன்னோக்கி செல்வதில் இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குத் திட்டத்திற்கு நன்றி. உயர்தரத்தில் குறைந்த செலவில் உயர்கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதே அரசின் குறிக்கோள் ஆகும். உலகத் தரத்திலான மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி வசதிகளுடன் கூடிய உயர்கல்வி மையமாக தமிழ்நாட்டினை உருவாக்குவதே அரசின் விருப்பமாகும். இதன் மூலம் தமிழ்நாடு, அறிவுத் தலைநகரம் ஆவதுடன், உயர்கல்விக்கும் மற்றும் உயர்தர ஆராய்ச்சிக்கும், அனைவராலும் நாடப்படும் மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

நமது நாட்டில் கல்வித் துறையில் தமிழ்நாடு சிறப்பான பாரம்பரியத்தை பெற்றிருப்பதுடன், உலகளவிலான உயர்கல்வியில் அதன் பங்களிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மிகப்பெரிய முன்னேற்றத்தை நோக்கி உயர்கல்வியினை

முன்னெடுத்துச் செல்வதில் பல்கலைக்கழகங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்துடன், 10 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும், 546 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் இணைவு பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 139 அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 448 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. தமிழகத்திலுள்ள 672 கல்வியியல் கல்லூரிகள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. 41 அரசு மற்றும் 34 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 414 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படுகிறது. இவ்வாறு, அதிக அளவில் பல்வேறுபட்ட பயிலகங்கள் உயர்கல்வித் துறையின் அனைத்து பரிணாமங்களையும் நிறைவு செய்தல், இம்மாநிலத்தை நாட்டின் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் வழிகாட்டுதலின்படி ‘‘தெரிவு அடிப்படையிலான மதிப்பீட்டு முறையில்’’ மாணவர்களின் அறிவு, திறன், அணுகுமுறை, நெறிமுறைகள் ஆகியவற்றினை மேம்படுத்துவதிலும், இளங்கலை மற்றும் முதுகலை அளவில் பாடத்திட்டங்களை தொடர்ந்து கண்காணிப்பதிலும், மதிப்பீடு செய்வதிலும், உயர்கல்வித் துறை உறுதியும், பொறுப்புணர்வும் கொண்டுள்ளது.

சமூகம் மற்றும் வேலைச் சந்தையின் தேவைகளை மாணவர்கள் பெறுவதற்கு ஏதுவாக, நமது பல்கலைக்கழகங்களில் உன்னதமான மனித

வளத்தினை ஏற்படுத்தி அதன் மூலம் மாணவர்கள் ‘வாழ்க்கை’, ‘தொழில் முனைதல் திறன்’ மற்றும் அறிவு ஆகியவற்றைப் பெறுவதற்குக் கீழ்க்காணும் திட்டங்கள் வாயிலாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் ஒரு தரமான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது:–

(i) காணொலி காட்சி வசதியுடன் கூடிய செயல்திறன்மிகு வகுப்பறைகள்

(ii) அயலகமொழி ஆய்வகங்கள்

(iii) தொழில்முனைவோர் – திறன் மேம்பாட்டு மையங்கள்

(iv) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து பேராசிரியர்களை வரவழைத்தல்

(v) கலைத்திட்ட மேம்பாட்டு மையங்கள்

(vi) பல்கலைக்கழக வணிக கூட்டிணைவு மையங்கள்.

(vii) தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த எழுத்து மையங்கள்

(viii) தொழில்நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையங்கள்

(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவ கருவிகள் தயாரிக்கும் மையங்கள்.

(x) முதுநிலை பட்டமேற்படிப்பு ஒப்புயர்வு மையங்கள்

(xi) ஐந்து பல்கலைக்கழகங்களின் கீழ் உள்ள முப்பது கல்லூரிகளில் மென்திறன் மையங்கள்

(xii) முதுகலைப் பட்டமேற்படிப்பு விரிவாக்க மையங்கள்

(xiii) விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல்

(xiv) நூலகங்களை இணையதளம் மூலம் கல்லூரிகளுடன் இணைத்தல்

மாநிலத்தின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு உயர்கல்வியினை கொண்டு செல்லும் நோக்குடனும், ஏழ்மையான மற்றும் நலிவுற்ற மாணவர்கள் உயர்கல்வியினை அவரவர் பகுதியிலேயே குறைந்த கட்டணத்தில் கற்கும் வகையில், 2011ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளில், 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் ஆகியன **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, உயர்கல்வியில் மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் 42 விழுக்காடாக அதிகரித்துள்ளது. தேசிய மொத்த மாணவர்கள் சேர்க்கை விகிதம் 21 விழுக்காடாக உள்ள நிலையில் 42 விழுக்காடு

சேர்க்கை விகிதத்துடன் நம் மாநிலம், நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாறியுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் வழிகாட்டுதலின்படி, சமூக, பொருளாதார நிலையில் ஏழ்மையான பின்னணியுடன் அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இங்கிலாந்தில் ஒரு பருவத்தினை கற்கும் வண்ணம் "வெளிநாட்டில் கற்கும் திட்டம்" எனும் தனித்துவமான திட்டத்தினை, தமிழக அரசின் முழு நிதியுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் உள்ள கீழ்கண்ட பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களில், இதுவரை பல்வேறு துறைகளிலிருந்து 50 மாணவ, மாணவிகள் மற்றும் 10 ஆசிரியர்கள் இரண்டு அணிகளாக ஒரு பருவ கல்வி பயின்றுள்ளனர்:– (i) நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் (ii) ஷெஃபீல்டு ஹாலம் பல்கலைக்கழகம் (iii) லீட்ஸ் பல்கலைக்கழகம் (iv) லீசெஸ்டர் மற்றும் சால்போர்ட் பல்கலைக்கழகம்.

இந்த ஆண்டு, இத்திட்டமானது, தமிழ்நாடு உயர்கல்வி மாநில மன்றத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் லாபம் இல்லா பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் (IIIT) துவங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் துறையில் உயர்படிப்பு தொடர விரும்பும் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்கிறது.

ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் சேர்க்கை பெற்ற முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. **2014–15** ஆம் கல்வியாண்டில் ரூ.**541.11** கோடி செலவிடப்பட்டு,

**2,83,379** மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன்பெற்றுள்ளனர்.

தற்போதுள்ள பல்கலைக்கழக உறுப்பு / அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் நிதி ஒப்பளித்துள்ளார்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப பாடப்புத்தகங்கள் வழியாக கல்வி பெறுவதற்கும் மற்றும் உலகில் உள்ள சமீபத்திய தொழில்நுட்ப முறைகளுக்கும் உள்ள இடைவெளியை இணைக்கும் வகையில் காணொலிக் காட்சி, ஒலிபரப்பு மையங்கள் மற்றும் ‘‘மின்னணு யந்திரா’’ ஆய்வகங்கள் ஆகியன பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் துவங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, அரசு கலை மற்றும்

அறிவியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களையும், மேலும் கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதியினையும் அளித்துள்ளது. இதற்கும் மேலாக கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டு, அதற்காக 1924 புதிய ஆசிரியப் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம், மாணவ சமுதாயம் உயர்கல்வியினை பல்வேறு பாடப்பிரிவுகளில் தொடர பேருதவி புரிவதுடன், பல்வேறு புலங்களில் வேலை வாய்ப்பினைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்கும் உயர்நோக்கோடு, அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக ஆசிரியப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ‘‘டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல்கலாம் விருதினை’’ வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இவ்விருது, ரூ.5 இலட்சம் நிதியையும், 8 கிராம் தங்கத்தால் ஆன பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் நலன், அறிவியல் மேம்பாடு, மனிதநேயத் துறைகளில் பங்காற்றியவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு, இப்பெருமை மிக்க விருதானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் நுண்அலை தொலை உணர்வு செயற்கைக்கோளின் திட்ட இயக்குநர் / விஞ்ஞானி திருமதி. N.வளர்மதி அவர்களுக்கு நமது **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் வழங்கப்பட்டது.

உயர்கல்வியில் தமிழ்நாடு உத்வேகத்துடன் கூடிய அபிரிமிதமான வளர்ச்சிபெற்றதற்கான பெருமை, மக்களை மையமாக வைத்து கொள்கைகளை வகுக்கும் நமது **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களுக்கு மட்டுமே உரித்தாகும். அவர்களின் நடைமுறைக்கேற்ற சீர்திருத்த கருணையுள்ளம் மற்றும் தொலைநோக்குப் பார்வை தமிழ்நாட்டுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. உயர்கல்வித்துறை, **மாண்புமிகு முதல்வரின்** தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழகத்தை உலக உயர்கல்வி அரங்கில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுவதற்கு பாடுபட உறுதி பூண்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு 2015–2016

மானியக் கோரிக்கை எண்.20, உயர்கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.3696.81 கோடி ஆகும். இதில், ரூ.924.47 கோடி திட்டப் பணிகளுக்கு உண்டானதாகும். ரூ.2772.34 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

**நிதி ஒதுக்கீடு 2015–2016.**

| கணக்குத் தலைப்பு | | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் | | |
| **2059** | பொதுப்பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | – | 2661.19 | 2661.19 |
| **2202** | பொதுக்கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 3139.21 | 229950.07 | 233089.28 |
| **2203** | தொழில்நுட்பக் கல்வி | 71752.35 | 42615.36 | 114367.71 |
| **2204** | போட்டி விளையாட்டு களும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 1296.84 | – | 1296.84 |
| **2205** | கலையும் பண்பாடும் ஆவணக் காப்பகங்கள் | 30.01 | 885.32 | 915.33 |

| | | | | |
|---|---|---|---|---|
| **2235** | சமூகப் பாதுகாப்பும் நலனும் | – | 60.09 | 60.09 |
| **2251** | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | - | **493.22** | **493.22** |
| **3425** | இதர அறிவியல் ஆராய்ச்சி | **118.50** | **506.05** | **624.55** |
| **3454** | மக்கள் தொகை புள்ளி விவரங்கள் முழுக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம், விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | - | **62.90** | **62.90** |
| **4202** | கல்வி, விளையாட்டு போட்டி , கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதன செலவு | **16110.44** | **--** | **16110.44** |
| **7610** | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | - | **0.01** | **0.01** |
| | மொத்தம் | **92447.35** | **277234.21** | **369681.56** |

## 2. தொழில்நுட்பக் கல்வி

2.1 தமிழக அரசு, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தொழில்நுட்பக் கல்வியில் பொறியியல் பட்டம் மற்றும் பட்டய நிலையில் தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு பல முன்னேற்றமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தமிழகத்தில் தற்சமயம் 10 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு நிதியுதவிபெறும் பொறியியல் கல்லூரிகளும், 17 அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் மற்றும் 546 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 41 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 34 அரசு நிதியுதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 3 இணைப்பு வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 1 திரைப்படப் பயிற்சி பயிலகமும், 1 தொழிலாளர் கல்வி பயிலகமும், (மாநில / மத்திய அரசின் பிற துறைகளின் நிதியுதவியுடன்) 15 சுயநிதி உணவக மேலாண்மை

பயிலகங்களும் மற்றும் **414** சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ வகுப்புகள் நடத்தும் **54** தனித்துவ சுயநிதி கல்வி நிறுவனங்களும் தமிழகத்தில் தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**சாதனைகள் மற்றும் முயற்சிகள்**

**இந்திய தகவல் தொழில்நுட்பப் நிறுவனம் நிறுவுதல் (IIIT)**

**2.2** இந்திய தகவல் தொழில்நுட்பப் நிறுவனம் ஒரு தன்னாட்சி கல்வி நிறுவனமாகும். பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பொது மற்றும் தனியார் பங்குதாரர்களைக் கொண்டு இலாப நோக்கமற்ற பொது நிறுவனமாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் துவங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் திறன்மிகு நபர்களை உருவாக்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

**2.3** திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில், **2013–14**ஆம் கல்வியாண்டில், இந்திய தகவல் தொழில்நுட்பப் நிறுவனம் **3** முதுநிலை பட்டப்படிப்புகளுடன் [கணினி அறிவியல் பொறியியல் (Computer Science Engineering), மென்பொருள் பொறியியல் (Software Engineering) மற்றும் தரவுத்தள பொறியியல் (Database System)] துவங்கப்பட்டது. **2015–16**ஆம் கல்வியாண்டு முதல் **3** இளநிலை பட்டப்படிப்புகள் [மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (Electronics and Communication), கணினி அறிவியல் பொறியியல் (Computer Science and Engineering), தகவல் தொழில்நுட்பம் (Information Technology)] ஒவ்வொரு படிப்பிலும் **60** மாணவ மாணவியர்களுடன் இந்நிறுவனத்தில் துவங்கப்பட்டுள்ளன.

**4 அரசு பொறியியல் கல்லூரிகளை நிறுவுதல்**

**2.4** **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் அறிவிப்பின்படி **2012–13** மற்றும் **2013–14**ஆம் கல்வியாண்டில் போடிநாயக்கனூர் (தேனி மாவட்டம்), செட்டிக்கரை (தர்மபுரி மாவட்டம்), செங்கிப்பட்டி (தஞ்சாவூர் மாவட்டம்) மற்றும் ஸ்ரீரங்கம் (திருச்சி மாவட்டம்) ஆகிய இடங்களில், **4** புதிய அரசு பொறியியற் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், நான்காண்டு காலத்தில் அரசு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை **50** விழுக்காட்டிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

**2.5** மேற்குறிப்பிட்ட **4** கல்லூரிகளுக்கும் **2014–15–**ஆம் கல்வியாண்டு வரை பல்வேறு பிரிவுகளில், ஆசிரியர், நூலகர், உடற்பயிற்சி இயக்குநர், பட்டறை மற்றும் தொழில நுட்பப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என மொத்தம் **602** புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**2.6** இக்கல்லூரிகளுக்குத் தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் மற்றும் மின்னிதழ் கொள்முதல் செய்ய **2014–2015**–ம் கல்வியாண்டு வரை ரூ.**15.17** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் இப்பணிகளுக்காக **2015–16**–ஆம் கல்வியாண்டில் ரூ.**2.76** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.7** மேலும் இந்த **4** கல்லூரிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு **2014–15**–ஆம் கல்வியாண்டு வரை ரூ.**216.22** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக நிர்வாக கட்டடம், வகுப்பறைகள், பணிமனை, ஆய்வகங்கள், நூலகம், கருத்தரங்க அறை, தங்கும் விடுதி மற்றும் கல்லூரி முதல்வர் குடியிருப்பு முதலியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**11 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுதல்**

**2.8** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, **2013–14–**ஆம் கல்வியாண்டு முதல் ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கந்தர்வகோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), அரியலூர் (அரியலூர் மாவட்டம்), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்), ஜோலார்பேட்டை (வேலூர் மாவட்டம்), ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்), செக்கானூரணி (மதுரை மாவட்டம்) மற்றும் செய்யாறு (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய இடங்களில் **11** அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நான்காண்டு காலத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை **30** விழுக்காட்டிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

**2.9** மேற்குறிப்பிட்ட **11** கல்லூரிகளுக்கும் முதலாமாண்டிற்கு பல்வேறு பிரிவுகளில், ஆசிரியர்கள், நூலகர், உடற்பயிற்சி இயக்குநர், பட்டறை மற்றும் தொழிலநுட்பப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என **673** பணியிடங்களும், இரண்டாம் ஆண்டிற்கு **319** பணியிடங்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**2.10** **11** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் மற்றும் மின்னிதழ் கொள்முதல் செய்வதற்கு முதலாமாண்டிற்கு ரூ.**550** இலட்சம் நிதி ஒதுக்கீடும், இரண்டாமாண்டிற்கு ரூ.**2420** இலட்சம் நிதி ஒதுக்கீடும் முன்றாம் ஆண்டிற்கு ரூபாய் **12.60** இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன.

**2.11** மேற்குறிப்பிட்ட **11** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் கட்டடங்கள்

கட்டுவதற்கு ரூ.172.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக கட்டடம், வகுப்பறைகள், பணிமனை, ஆய்வகங்கள், நூலகம், கருத்தரங்க அறை, தங்கும் விடுதி ஆகிய பல்வேறு எழிலார்ந்த கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**விலையில்லாப் பாடப் புத்தகங்கள்**

2.12 சமூகத்தின் நலிவடைந்த பிரிவுகளிலிருந்து வரும் ஏழை எளிய மாணவ மாணவியர்கள் தொழில்நுட்பக் கல்வியினை பெறும் பொருட்டு, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பு பயிலும் முதலாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள் விலையின்றி வழங்கப்படுகிறது. 2014–15–ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.13,70,063/– செலவிடப்பட்டு, 13,121 மாணவ மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**பொருளாதாரத்தில் நலிவடைந்த ஏழை மாணவ மாணவியர்களுக்கு நிதியுதவி அளித்தல் (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி)**

**2.13 2012–13** மற்றும் **2013–14–**ஆம் கல்வியாண்டில் பொருளாதாரத்தில் நலிந்த ஏழை மாணவ, மாணவியர்கள் இளநிலை பொறியியல் மற்றும் இளநிலை தொழில்நுட்ப படிப்புகளை தொடர்வதற்கு ஒரு மாணவருக்கு ரூ.**25,000/–** வீதம் **55** மாணவ மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.**13,75,000/–** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்**

**2.14** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி உரிய

துறைகள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.15 **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமை திட்டத்தின் கீழ் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 79 அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பலவகைத் தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 2013–14–ஆம் கல்வியாண்டில் 16,678 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. 2014–2015–ம் கல்வியாண்டில் 10,574 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை இத்துறையின் மூலம் 1,56,980 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு மற்றும் பேருந்து கட்டணச் சலுகை**

2.16 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு

கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கும் திட்டமும் மற்றும் கட்டணமில்லா பேருந்து அட்டை வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒற்றைச் சாளர முறையில் பொறியியல் கல்லூரிகளில் மாணவ மாணவியர் சேர்க்கை**

2.17 பன்னிரெண்டாம் வகுப்பு வாரியத் தேர்வில் மாணவ மாணவியர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பட்ட வகுப்புகளுக்கு, மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெறுகிறது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் 100 சதவிகித இடங்களும், அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி பாடப்பிரிவுகளில் 70 சதவிகித இடங்களும், சிறுபான்மையினர் அல்லாத சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 65 சதவிகித சேர்க்கை இடங்களும் மற்றும் சிறுபான்மையினர் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 50 சதவிகித

சேர்க்கை இடங்களும் அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஒற்றைச் சாளர முறை தமிழ்நாடு பொறியியல் மாணவ மாணவியர் சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம்-II (TEQIP-II)**

**2.18** தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் (TEQIP-II) **2012–13–**ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை மற்றும் மாநில அரசால் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்படி, மத்திய மாநில அரசுகளின் உதவித் தொகை விகிதம் 75 : 25 ஆகும்.

**2.19** தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TEQIP-II), தமிழ் நாட்டில் **4** அரசு, **3** அரசு நிதி உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், திருச்சி பாரதிதாசன் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரி மற்றும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின்

கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அரசு பொறியியல் கல்லூரியில், மாற்று எரிசக்தி மற்றும் சுற்றுசூழல் ஆய்வுகள் மேற்கொள்ளும் இரண்டு சிறப்பாய்வு மையங்களும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**2.20** நமது மாநிலத்தில் TEQIP-II திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநில திட்ட அமலாக்கப்பிரிவு மார்ச் **2012** முதல் அக்டோபர் **2014** வரையிலான திட்ட காலத்தில் செலவிடப்படவேண்டிய மொத்த தொகை ரூபாய் **114.9** கோடி ஆகும்.

**2.21** இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.**98.78** கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் **75** விழுக்காடு பங்களிப்புத் தொகையான ரூ.**74.089** கோடியும், மாநில அரசின் **25** விழுக்காடு பங்களிப்புத் தொகையான ரூ.**24.697** கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

**முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டண சலுகை**

**2.22** **2010–11–**ஆம் கல்வியாண்டு முதல், ஒற்றைச் சாளர முறை மூலம் அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், அரசு ஒதுக்கீட்டின் கீழ் முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு நேரடி சேர்க்கை பெற்ற மாணவ மாணவியர்களில் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

**2.23** **2013–14–**ஆம் கல்வியாண்டில், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டண சலுகையாக ரூ.**565.99** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் ரூ.**547.87** கோடி செலவிடப்பட்டு, சுமார் **2,87,021** முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**2.24** **2014–15–**ஆம் கல்வியாண்டில் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு

கல்விக் கட்டண சலுகையாக ரூ.**569.25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் ரூ.**541.11** கோடி செலவிடப்பட்டு, சுமார் **2,83,379** முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**இலங்கை தமிழ் அகதி மாணவ மாணவியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்**

**2.25 2011–12–**ஆம் கல்வியாண்டு முதல் தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதி மாணவ மாணவியர்கள் பி.இ., / பி. டெக். இரண்டாமாண்டு நேரடி மாணவ மாணவியர் சேர்க்கை மற்றும் எம்.பி.ஏ / எம்.சி.ஏ. / எம்.ஈ., / எம்.டெக்., போன்ற முதுநிலை மாணவ மாணவியர் சேர்க்கையில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**2.26** தமிழகத்தில் ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு மூலம் பொறியியல் கல்லூரி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை, இலங்கை தமிழ் அகதி

மாணவ மாணவியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 2014–15–ஆம் கல்வியாண்டில் 17 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

## வெளிநிலை மென்பொருள் பயிற்சி (OPEN SOURCE SOFTWARE TRAINING)

2.27 **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் தலைமையின் கீழ் ஜாவா, பிஎச்பி, லினக்ஸ் போன்ற வெளிநிலை மென்பொருள் பயன்பாட்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களின் திறனை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 403 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் வெளிநிலை மென்பொருள் பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. மாணவ மாணவியர்கள் வெளிநிலை மென்பொருள் பயன்பாட்டில் தங்கள் திறனை மேம்படுத்தும் பொருட்டு, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

## 3. கல்லூரிக் கல்வி

**3.1** **1965**ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வி இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டது. உயர்கல்வியில், தமிழ்நாடு மிக வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் ஒன்றாக, சிறப்புமிகு தகுதி பெற்றுள்ளது.

**3.2** தற்போது **76** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், **139** அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், **448** சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், **3** அரசு உதவி பெறும் உடற்கல்வி கல்லூரிகளும், **8** சுயநிதி உடற்கல்வி கல்லூரிகளும், **4** அரசு உதவி பெறும் கீழ்திசைக் கல்லூரிகளும், **2** அரசு உதவி பெறும் சமூகப்பணி கல்லூரிகளும், **7** அரசு கல்வியியல் கல்லூரிகளும், **14** அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளும், **651** சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும் மற்றும் **37** பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் என மொத்தம் **1,389** கல்லூரிகள், கல்லூரிக் கல்வி

இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. கடந்த 40 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் பட்டப் படிப்புகளுடன் புதிய பட்ட மேற்படிப்புகளான எம்.சி.ஏ. / எம்.பி.ஏ / எம்.எஸ்.சி (தகவல் தொழில்நுட்பம்) தொடங்கப்பட்டுள்ளன. இதனால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது.

**பதினான்கு புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் மற்றும் இரண்டு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் துவக்கம்**

**3.3** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிறைவேற்றுதல் தலைமையின் கீழ் 2013–14 மற்றும் 2014–15ஆம் கல்வியாண்டுகளில், திருப்பூர் மாவட்டம், காங்கேயம், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் (மகளிர் கல்லூரி), கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி, விருதுநகர் மாவட்டம், சிவகாசி, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி, திருவாடணை, முதுகுளத்தூர், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர், நாகபட்டினம் மாவட்டம், மணல்மேடு, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஆகிய இடங்களில் 14 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் மற்றும் கடலூர் மாவட்டம், திட்டக்குடி ஆகிய இடங்களில் முறையே பெண்கள் மற்றும் இருபாலருக்கான 2 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு துவக்கியுள்ளது.

**அரசு கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள்**

**3.4** **2011–12**ஆம் கல்வியாண்டில் **101** புதிய பாடப்பிரிவுகள், **2012–13**ஆம் கல்வியாண்டில் **298** புதிய பாடப்பிரிவுகள், **2013–14**ஆம் கல்வியாண்டில் **397** புதிய பாடப்பிரிவுகள் **2015–16**ஆம்

கல்வியாண்டில் **163** பாடப்பிரிவுகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன. இப்பாடப்பிரிவுகளை நடத்துவதற்கு **1924** உதவிப் பேராசிரியர் பணியிடங்களையும் அரசு தோற்றுவித்துள்ளது. இவ்வாறு ஆசிரியப் பணியிடங்களுடன் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், உயர்கல்வியில் அனைவருக்கும் கல்வி, சமநிலை, மேன்மை ஆகியவற்றினை நிறைவேற்றும்போது மாணவர்களுக்கு பல்வேறு வகையான வாய்ப்புகளை வழங்குகிறது.

**அரசுக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் பணிநியமனம்**

**3.5** அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் **1093** உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பிடும் பணி முடிவுற்றுள்ளது. மேலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

மற்றும் கல்வியியல் கல்லூரிகளில், **2012–2013** மற்றும் **2013–2014** ஆம் ஆண்டிற்கான **1272** உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**அரசுக் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள்**

**3.6** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் வகுப்புகளை நடத்தும் முறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. **2014–15**ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி–II வகுப்புகளை நடத்துவதற்கு **1661** கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**2014–15**ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பப்படும் வரை சுழற்சி–I வகுப்புகளை நடத்துவதற்கு **1623** தற்காலிக கௌரவ

விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, புதிதாகத் தொடங்கப்பட்ட 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 60 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப் பட்டனர்.

**இலவசக் கல்வி**

3.7 அரசு கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்பு வரையும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலைப் பட்டப்படிப்பு வரையும் இலவசக்கல்வி வழங்கப்படுகிறது. 2014–15ஆம் கல்வியாண்டில் 4,49,918 மாணவ மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**கல்லூரி மாணவர்களுக்கான இலவச பேருந்துப் பயண அனுமதிச் சீட்டு**

3.8 அரசு கல்லூரி மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. 2014–15ஆம் கல்வியாண்டில்

1,34,527 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

**மகளிர்க்கென பயிற்சி மையங்கள்**

**3.9** சென்னை, இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரிகளில் அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுகளுக்குத் தயாராகும் மகளிருக்கெனத் தனியே இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பட்டப்படிப்புடன் பட்டயப்படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு (Add on Course) படித்தல்**

**3.10** மாணவர்கள் வேலை வாய்ப்பினை பெறும் பொருட்டு, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு நிதி உதவித் திட்டத்தின் கீழ் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பினை, அரசால்

தெரிவு செய்யப்பட்ட பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலுகிறார்கள். 2014–15ஆம் கல்வியாண்டில் 7,622 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**வேலைவாய்ப்பு முகாம்**

**3.11** கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மாணவர்கள் நலனுக்காக வேலை வாய்ப்புப் பிரிவு (Placement Cell) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு மூலமாக சென்னை, இராணி மேரி கல்லூரி, சென்னை, வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி; திருவண்ணாமலை, அரசு கலைக் கல்லூரி; செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரி; கரூர், அரசு கலைக் கல்லூரி; கடலூர், பெரியார் அரசுக் கல்லூரி; கோயம்புத்தூர், அரசு கலைக் கல்லூரி; திருப்பூர், சிக்கன்னா அரசு கலைக் கல்லூரி மற்றும் திருநெல்வேலி இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில்

வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு முன்னணி நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களில் மாணவர்கள் பணியமர்த்தத் தேர்வு செய்யப்பட்டனர். மேற்காண் வேலை வாய்ப்பு முகாம்களின் வாயிலாக **3,971** மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

**தமிழ் வழி பயிலும் மாணவ / மாணவியர்க்கு ஊக்கத் தொகை**

**3.12** தமிழ் வழியாகக் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் **1971–72**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வூக்கத் தொகை ஒரு மாணவருக்கு ரூ.**180/–** என்ற வீதத்தில் **1996–97** ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. பின்னர் இவ்வூக்கத்தொகை ரூ.**400/–** என உயர்த்தி வழங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அரசு ரூ.**135.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்கிறது. **2014–15**ஆம் நிதி ஆண்டில் **34,115** மாணவ /

மாணவிகள் பயனடைவதற்கேதுவாக ரூ.136.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்**

**3.13** அரசு கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களில் குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைப் பயிலுவதில் துவக்கத்தில் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவ மாணவியர்கள் மேற்கண்ட பாடங்களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு மாலை நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இச்சிறப்பு பயிற்சியை முடித்தவுடன், மாணவர்கள் கல்வியை தொடர்ந்து பெறுவதற்கு தகுதியினை பெற்று, தேர்வுகளில் சிறப்பாக எழுதுவதற்கு தயாராகிறார்கள்.

2014–15ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, 11,404 மாணவ, மாணவியர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**ஆராய்ச்சிப் படிப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை**

3.14 இத்திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ/ மாணவியருக்கு ஓர் ஆண்டிற்கு ரூ.36,000/– படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2014–15ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 89 ஆராய்ச்சிப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.32.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**சுயநிதிக் கல்லூரிகளில் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு படிப்புதவித் திட்டம்**

**3.15** சுயநிதி கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிட / பழங்குடி / கிறித்துவ மதம் மாறிய மாணவர்களுக்கான கல்விக் கட்டணங்களை அரசே வழங்கும் உதவித் தொகை திட்டத்தை **2013–14**ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வி இயக்ககம் நடைமுறைப்படுத்தியது. இத்திட்டத்தின் படி ஆதி திராவிட / பழங்குடி / கிறித்துவ மதம் மாறிய மாணவர்கள் சார்பில் அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணங்கள் சுயநிதி கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு அரசால் வழங்கப்பட்டது. அதன்படி **2013–14**ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ் **2013–14**ஆம் ஆண்டில் ரூ.**86,28,70,000/–** (ரூபாய் எண்பத்து ஆறு கோடியே இருபத்து எட்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) அரசு வழங்கியுள்ளது. **33,330** மாணவர்களுக்கு கல்விக் கட்டண உதவித்தொகையாக ரூ.**86,26,62,450/–** (ரூபாய்

எண்பத்து ஆறு கோடியே இருபத்து ஆறு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) செலவு செய்யப்பட்டது.

**அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**3.16** **2012–13**ஆம் ஆண்டில் **62** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், **7** அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் **24** பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.**100** கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. அதனைச் செயல்படுத்தி **69** அரசு கல்லூரிகள் மற்றும் **24** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் மாணவ/ மாணவியர்கள் பயன்படுத்துவதற்கு ரூ.**44,49,76,745/–** மதிப்பீட்டில் மேசை, நாற்காலிகள் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) மூலமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள்,

பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.26,80,45,000/– அரசு வழங்கியுள்ளது.

**2013-14ஆம் ஆண்டில் பரமக்குடி அரசு கலைக்கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்**

3.17 பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் புதிதாகத் தொடங்கப்பட்ட 8 பாடப் பிரிவுகளுக்குத் தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், துறைத் தலைவர்கள் அறை, அலுவலக பணியாளர்கள் அறை மற்றும் பொது நூலகம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.4.67 கோடி அரசு வழங்கியுள்ளது. இக்கட்டிடப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் / கட்டடங்கள் கட்டுதல்**

**3.18** கரூர் அரசு கலைக்கல்லூரியில் **12** கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், ஆடவர் மற்றும் மகளிருக்கான கழிவறைகள் கட்டுதல் உள்ளிட்ட கட்டிடப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.**4.49** கோடி அரசு வழங்கியுள்ளது. மேற்குறித்த கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு கட்டிடங்கள் பயன்பாட்டில் உள்ளன.

**2013–14, 2014–15 ஆண்டில், பகுதி–II திட்டத்தின் கீழ், அரசு கல்லூரிகளில் வகுப்பறைகள்/ விடுதிகள்/ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்**

**3.19 2013–14**ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் கும்பகோணம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் (தன்னாட்சி), மாணவர்களுக்கான விக்டோரியா விடுதியினைக் கட்டுவதற்கு ரூ.**100** இலட்சம் அரசு வழங்கியுள்ளது. மேலும், சிதம்பரம் அரசு கலைக் கல்லூரியில் 7 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.**70** இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

மேற்படி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**3.20 2014–15** ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரிக்கு **15** கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு **ரூ.170.50** இலட்சத்திற்கும் மற்றும் வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரியில் **(தன்னாட்சி)** ஊட்டச்சத்து மற்றும் உணவு கட்டுப்பாடு துறைக்கான ஆய்வுக் கூடம் கட்டுவதற்கு **ரூ.110** இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

**மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் புதிய அலுவலகங்கள்ஏற்படுத்துதல்**

**3.21** திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு **ரூ.4.59** கோடி அரசு வழங்கியுள்ளது.

மேலும் தருமபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் புதிய கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**விளையாட்டு**

**3.22** தமிழ்நாட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விளையாட்டு என்பது கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது. மாணவர்கள் விளையாட்டில் சிறப்பு நிலைபெற்று, தேசிய மற்றும் சர்வதேச அளவில் பரிசுகள் மற்றும் கேடயம் வென்றுள்ளார்கள். அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர்கள் வாள்சண்டை, கபடி, வாலிபால், தடை தாண்டுதல், ஓட்டப்பந்தயம், சதுரங்கம், ஹாக்கி, எடை தூக்குதல், பளு தூக்குதல், நீச்சல் மற்றும் கைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் அகில இந்தியப் பல்கலைக்கழகங்கள், மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பு நிலையை அடைந்துள்ளனர்.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

**3.23** நாட்டு நலப்பணித்திட்டம் தமிழகத்தில் செப்டம்பர், **1969** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, இத்திட்டம் **3,79,300** மாணவத் தன்னார்வலர்களுடன் பல்வேறு கல்வி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்குகின்றனர். தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறையின் ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:–

1. அண்ணா பல்கலைக்கழகம்
2. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
3. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
4. சென்னைப் பல்கலைக்கழகம்
5. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
6. பாரதியார் பல்கலைக்கழகம்
7. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
11. பெரியார் பல்கலைக்கழகம்
12. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 4.1 அண்ணா பல்கலைக்கழகம்

**4.1.1.** சென்னை நகரத்தில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரி (CEG-1794), அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (ACT-1944), சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (MIT-1949), கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் நிறுவனம் (SAP-1957) ஆகிய நான்கு கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து ஒருமை வகை பல்கலைக்கழகமாக 1978—ஆம் ஆண்டு செப்டம்பார் 4ஆம் நாள் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழகமானது, தமிழ்நாட்டில் உள்ள எல்லா பொறியியல் கல்லூரிகளையும் தன்னகத்தே கொண்டு இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. மீண்டும் 2010—இல் ஒருமை வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. பின்னர் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் உயர்ந் நோக்கத்தின்படி தொழில்நுட்பக் கல்வியை

அனைவருக்கும் ஒரே சீரான மற்றும் தரமான வகையில் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் 1.8.2012 முதல் எல்லா பொறியியல் கல்லூரிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து, மிகப்பெரிய தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. தற்போது 13 உறுப்பு கல்லூரிகளையும், 4 மண்டல அலுவலகங்களையும், 622 இணைப்பு கல்லூரிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகம் அதன் துறைகளின் மூலமாக 29 இளநிலை மற்றும் 79 முதுநிலை பட்டப்படிப்புகளையும் 16000 மாணவ / மாணவியர்களுக்கு வழங்குகிறது. மேலும், அதன் இணைவு பெற்ற கல்லூரிகளின் மூலமாக 40 இளநிலை மற்றும் 57 முதுநிலை பட்டப்படிப்புகளை 8 லட்சம் மாணவ / மாணவியர்களுக்கு வழங்குகிறது. மேலும் அண்ணா பல்கலைக்கழகம் முனைவர்

பட்டத்திற்கான **11768** ஆராய்ச்சி மாணவர்களும் M.S. ஆராய்ச்சி பட்டத்திற்கான **176** மாணவர்களும் பயின்று வருகின்றனர் என்பதில் பெருமை கொள்கிறது. மொத்த மாணவ, மாணவிகளில் **35** விழுக்காடு மாணவிகள் ஆவர்.

A தரமதிப்பீட்டுடன் ஐந்து ஆண்டுகளுக்கான அங்கீகாரம் தேசிய தர மதிப்பீட்டு குழுவினரால் (NAAC), அண்ணா பல்கலைக்கழகத்திற்கு செப்டம்பர் **2014** இல் வழங்கப்பட்டுள்ளது. **1999–2014** ஆம் ஆண்டுகளின் ஆராய்ச்சி வெளியீடுகளின்படி 'h' குறியீடு **86** ஐ அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

**2014**ஆம் ஆண்டின் QS (Quacquarelli Symonds) தர நிலைப்படி, BRICS நாடுகளின் முதன்மையான **200** பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுள்ள **20** இந்திய பல்கலைக்கழகங்களில் அண்ணா பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இந்தியாவிலேயே, முதன் முதலில், ISRO உடன்

இணைந்து, ANUSAT என்கிற நுண்செயற்கை கோளினை விண்ணில் செலுத்திய முதல் பல்கலைக்கழகம் அண்ணா பல்கலைக்கழகமாகும். இந்த நுண் செயற்கைகோள் 2012 ஆம் ஆண்டு வரை புவி சுற்று வட்டப்பாதையில் இயங்கியது.

### 4.1.2. அண்ணா பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள்

- வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் மேலான மனித வளங்களை உருவாக்க பொறியியல் கல்வியின் தரத்தினை சீராக உயர்த்துதல்.
- மாநிலம் முழுவதும் தரமான கல்வியை அளிக்கவும், மாணவர்கள் அவர்களுடைய கனவுகளை நிறைவேற்றவும், அண்ணா பல்கலைக்கழகத்தின் கல்வி அனுபவம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பிற நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

- பொறியியல் கல்வியை அளிக்கும் போது தொழில்நுட்ப முன்னேற்றத்தை பயன்படுத்தி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவர்களது கடமையை நிறைவேற்றுவதிலும், அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குவதில் பங்கெடுத்துக் கொள்வதற்கும், வித்தகநெறி, தொழில்தரம் ஆகியவற்றை நிலைநிறுத்த நடவடிக்கை எடுத்தல்.

### 4.1.3. கடந்த நான்கு ஆண்டுகளில் அண்ணா பல்கலைக்கழகத்தின் முக்கிய சாதனைகள்

- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்கு பார்வைக்கேற்ப அண்ணா பல்கலைக்கழகம், அதன் துறைகளுக்கான பாடத்திட்டங்களை **2015–2016**ஆம் ஆண்டு முதல் விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறை **(CBCS)** மூலம் மாற்றியமைத்துள்ளது. அதன் இணைவு பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கான

பாடத்திட்டங்களை 2013–14ஆம் ஆண்டில் மாற்றியமைத்துள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் ஒற்றை சாளர முறையில் இளநிலை மற்றும் முதுநிலை சேர்க்கைக்கான கலந்தாய்வினை 1.85 இலட்சம் மாணவ / மாணவியர்களுக்கு அண்ணா பல்கலைக் கழகம் சிறப்பாக நடத்தி வருகிறது.
- அண்ணா பல்கலைக்கழகம், 80 'நவீன காணொலிக் காட்சியுடன் கூடிய செயல்திறன் வகுப்பு அறைகளை' ரூ.2.10 கோடி செலவில் ஏற்படுத்தியுள்ளது.
- 2014ஆம் ஆண்டு நடைபெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் 35வது பட்டமளிப்பு விழாவில் 1010 ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் முனைவர் பட்டத்தினை பெற்றுக் கொண்டனர். இது அண்ணா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா வரலாற்றில் முனைவர் பட்டம் பெற்றவர்களின்

எண்ணிக்கையின் அதிகபட்ச பதிவாகும். மேலும், இந்தியாவில் உள்ள மற்ற தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கையைவிட இவ்வெண்ணிக்கை அதிகமானதாகும்.

- மாணவர்களை பரிமாற்றம் செய்து கொள்ளும் திட்டத்தின் கீழ், **2011–12**–லிருந்து **2014–15**ஆம் ஆண்டு வரையில் **160** அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களிலும், **41** அயல்நாட்டு பல்கலைக்கழக மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்திலும் பயின்றுள்ளனர்.
- **2011–12**–லிருந்து **2014–15**ஆம் ஆண்டு வரையில் அண்ணா பல்கலைக்கழகமானது அயல்நாட்டு பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களுடன் **33** புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும், தேசிய அளவிலான கல்வி

நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்களுடன் 20 புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டுள்ளது.

- **2011–12** முதல் **2014–15** ஆண்டு வரையில் அண்ணா பல்கலைக்கழகத்தால் ரூ.**64** கோடி மதிப்பிலான **224** நிதியுதவி ஆராய்ச்சி திட்டங்களும், ரூ.**67.35** கோடி மதிப்பிலான **2543** ஆலோசனை சேவைகளும் மற்றும் ரூ.**2** கோடி மதிப்பிலான **5582** சோதனைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.
- **2013–14**ஆம் ஆண்டில், ஆசிரியர்களின் ஆராய்ச்சி பணியினை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த ஆராய்ச்சியாளர் விருது, சிறந்த ஆலோசகர் விருது, புதிய கண்டுபிடிப்பாளருக்கான சிறந்த விருது, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகளை ஊக்குவிக்க, தொழில்நுட்ப பரிமாற்ற விருது

ஆகிய விருதுகளை அண்ணா பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

- **2011–15**ஆம் ஆண்டுகளில், அண்ணா பல்கலைக்கழகத்தால் **2576** ஆராய்ச்சி கட்டுரைகள் சர்வதேச இதழ்களிலும், **225** ஆய்வு கட்டுரைகள் தேசிய இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், **99** புத்தகங்களையும் அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) நிதியுதவியுடன் ரூ.**12.4** கோடி மதிப்பில் தேசிய சுகாதார மயமாக்கல் வளர்ச்சி மையம் (NHHID) உருவாக்கப்பட்டுள்ளது.
- மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் (MHRD) வழங்கப்பட்ட ரூ.**4** கோடி நிதியினைக் கொண்டு, **2013**–ஆம் ஆண்டு

உயிரி மருத்துவ பயன்பாட்டுக்கான சிறப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

- **2014**ஆம் ஆண்டு, உயிரி தொழில்நுட்ப தொழில் ஆராய்ச்சி மற்றும் உதவிக்குழுமம் (BIRAC) மற்றும் தேசிய புத்தாக்கக் குழுமம் (NINC) ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட ரூ.**2.3** கோடி நிதியினை கொண்டு பல்கலைக்கழக புத்தாக்க திரள் (University Innovation Cluster) ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- **2014–**ல் இருந்து **2019** ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையிடமிருந்து "DBT-Anna University Interdisciplinary Life Science Programme for Advance Research and Education" எனும் திட்டத்திற்காக ரூ.**10.44** கோடி பெறப்பட்டுள்ளது.

- தற்பொழுது சிறப்பு உதவி திட்டத்தின் (UGC-SAP) மூலம் அங்கீகரிக்கப்பட்ட **20** துறைகள் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிடமிருந்து நீண்ட கால மானியமாக ரூ.**15.94** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, FIST திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்புக்கான மானியத்தை பெறுவதற்கு **19** துறைகளை அங்கீகரித்து மானியமாக ரூ.**16.16** கோடி ஒதுக்கியுள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையானது (DST), PURSE திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகத்திற்கு ஆதரவு தருகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, **2014**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ள PURSE-நிலை II திட்டத்திற்கு ரூ.**35.64** கோடியினை வழங்க ஒப்புதல் அளித்து, முதல்

தவணையாக ரூ.7 கோடியினை 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012ன் படி, 20 kW கூரை கட்டிடம் பி வி அமைப்பு முறையினையும் மற்றும் 4 kW சூரிய பி வி நீர் இறைக்கும் முறையினையும் பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவியுள்ளது.
- 2012 ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழக நூலகமானது பெரும்பான்மையான மின் இதழ்களை பயன்படுத்தியதற்காக IEEE, ASME, ASCE மற்றும் SPRINGER போன்ற நிறுவனங்களின் விருதுகளை பெற்றுள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகத்தில் 360 Mbps கொண்ட இணைய பட்டையகலம் உள்ளது. தேசிய அறிவு வலையதளத்தின் கீழ், இப்பல்கலைக்கழகம் 1 Gbps கொண்ட இணைய பட்டையகலத்தை பிரதான

வளாகத்திற்கும் மற்றும் MIT வளாகத்திற்கும் வழங்கியுள்ளது.

- பல்கலைக்கழகம் முழுவதும் WiFi மூலம் இணைக்கப்பட்டுள்ளது.
- **2011–12** முதல் **2014–15** வரையிலான காலங்களில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக துறை சார்ந்த **6968** மாணவர்களும், மாநில அளவில் **5015** மாணவர்களும் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.
- **2011–12** முதல் **2014–15** வரையிலான காலங்களில் **401** மாணவர்கள் வேலைவாய்ப்பு பயிற்சிக்கு சென்றுள்ளனர்.
- தமிழ்நாடு பொது நூலகத்துறைக்காக FOSS Product KOHA ஐ பயன்படுத்தி தமிழகத்தில் உள்ள **32** மாவட்ட மத்திய நூலகங்கள் மற்றும் கன்னிமாரா

நூலகத்தையும் AU-KBC மையம் ஒருங்கிணைத்து நவீனப்படுத்தியுள்ளது.

- அறிவுசார் சொத்து என்பதற்கான அமெரிக்க காப்புரிமையை அண்ணா பல்கலைக்கழகம், நவம்பர் 2012 இல், "Chained Checksum Error Correction Mechanism to improve Transmission Control Protocol Performance over network with Wireless links" என்னும் தலைப்புக்காகப் பெற்றுள்ளது.
- மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக சுமார் 18,369 மாணவ/மாணவியர்களும், 1,228 அலுவலக பணியாளர்களும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களும் பயன்பெற்றுள்ளனர்.
- 2014–15 ஆம் ஆண்டில், ஆசிரியர்களால் மொத்தம் ரூ.16.54 கோடிக்கு 38 ஆராய்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ரூ.16.23 கோடி வருவாயினை 545

ஆலோசனை சேவையின் மூலமாகவும், ரூ.35 இலட்சத்தினை 957 சோதனை வேலைகளின் மூலமாகவும் பெற்றுள்ளது.

- 2014–15ஆம் ஆண்டில் பல்வேறு பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் ரூ.870 இலட்சம் மதிப்பிலான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொண்டனர்.
- அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர் மேம்பாட்டு மையம், ஆசிரியர்களுக்கு கணிதம், இயற்பியல் மற்றும் ஆங்கிலத்தில் Bridge course நடத்துவதற்காக 10 நாட்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. அதில் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 500 பொறியியல் கல்லூரிகளிருந்து 2000 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.
- அண்ணா பல்கலைக்கழகத்தின் 13 உறுப்புக் கல்லூரிகளுக்கும் 3 மண்டல அலுவலகங்களுக்கும் உள்கட்டமைப்பு

வசதிகளை உருவாக்க **2014–15** ஆண்டில் ரூ.**193.57** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- **2014–15** ஆம் ஆண்டில் முதன்மை வளாகம் மற்றும் MIT வளாகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.**104.50** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 4.2 தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.2.1** நமது நாட்டில் ஆசிரியத்துறைக்கென உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமான, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 2008ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தற்பொழுது 7 அரசு கல்வியியல் கல்லூரிகள், 14 அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள், 2 இந்திய அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகள் 666 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 689 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகம் கல்வி மற்றும் ஆய்வுத் துறைகளில் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்று, தற்சமயம் 6 கல்வி மற்றும் ஆய்வுத்துறைகளை கொண்டுள்ளது.

### 4.2.2 நோக்கங்கள்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைகக்கழத்தின் முக்கிய நோக்கம், தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்தின் நெறிமுறைகள், நடைத்தைமுறைகள் மற்றும் தமிழ்நாடு அரசின் ஆணைகளின்படி, மாநிலத்தில் உள்ள அனைத்து ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகளும் நடத்தப்படுகின்றனவா என கண்காணித்தல் ஆகும். மேலும் ஆசிரியர் கல்வியினை மேம்படுத்த கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், விவாத அரங்கம் (Symposium) ஆகியவைகளை புதிய நடைமுறைக்கு ஏற்ப நடத்துதல் ஆகும்.

### 4.2.3 சாதனைகள்

- காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கம் கிராமத்தில் பல்கலைக்கழகத்திற்கு தேவையான கல்விப்புலக் கட்டிடம், நிர்வாகக் கட்டிடம்,

விடுதிக் கட்டடம், நூலகம் ஆகியவை ரூ.95.00 கோடி செலவில் கட்டுவதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களால் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக ரூ.38.35 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலமாக கட்டடிப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- இந்திய அரசின் தேசிய தொலைபேசி நிறுவனம் Server மூலமாக 1–GB connectivity–னை இப்பல்கலைக்கழகத்தில் இணைத்துள்ளது. இது இப்பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளுக்கும் நீட்டிக்கப்படும்.
- 13 கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் ஆராய்ச்சி படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனைத்தொடர்ந்து, 2014–15 ஆம்

ஆண்டிற்கு மேலும் 4 கல்லூரிகளுக்கு ஆய்வியல் நிறைஞர் படிப்பினை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு ஜனவரி 2014 முதல் இளநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் போன்ற ஆராய்ச்சி பட்டப்படிப்புகளில் சேருவதற்கு பொது நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் மாணவ மாணவியர் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது.

- பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் 12(B) அங்கீகாரம் பெற இப்பல்கலைக்கழகத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆறு ஆராய்ச்சி துறைகளில், ஒவ்வொரு துறைக்கும் ஒரு பேராசிரியர், இரண்டு இணை பேராசிரியர்கள், நான்கு உதவி பேராசிரியர்கள் என்ற முறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் 12(B)

அங்கீகாரம் பெறுவதற்கு இப்பல்கலைக்கழகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.2.4 2014–15ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- இப்பல்கலைகழகம் தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்துடன் இணைந்து (நெறிமுறைகள், விதிமுறைகள், வரையறைகள்) நெறிமுறைகள் 2014 பயிற்சி பட்டறையினை நடத்தியுள்ளது.
- தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டின் புதிய நெறிமுறைகளுக்கு இணங்க இரண்டு ஆண்டு பி.எட்., எம்.எட் படிப்புகள், தொலைதூர பி.எட் படிப்பி, நான்கு ஆண்டு பி.ஏ.பி.எட்.,/பி.எஸ்சி.பி.எட் படிப்பு, பகுதிநேர பி.எட் படிப்பு, ஒருங்கிணைந்த மூன்றாண்டு பி.எட் மற்றும் எம்.எட் படிப்பு ஆகியன குறித்து 21.01.2015 அன்று

இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி கல்விக்குழு கலந்தாய்வு செய்தது.

- பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு திறன் வளர்க்கும் விதமாக நெறிபடுத்தும் பயிற்சி பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது. அதனடிப்படையில், பல்கலைக்கழகம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இந்திய மைக்ரோ சாப்ட் நிறுவனம், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், அலுவலக ஊழியர்களுக்காக Sakshm Faculty Empowermet Programme–ஐ வடிவமைத்து நெறிப்படுத்துதல் பயிற்சி வழங்கியது.
- பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பகுடி வதை (Ragging) தொடர்பான நிகழ்வுகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ள துணைவேந்தர் அவர்களின் தலைமையில் ஒரு பகுடி வதை ஒழிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இப்பல்கலைக்கழகம் மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனமான தேசிய சோதனை மையத்துடன் இணைந்து பல்கலைக்கழகம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளுக்கு தேர்வு வடிவமைப்பு மற்றும் உருப்படி எழுதுதல் பற்றிய பயிற்சியினை கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத் துறை வழியாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கியது.
- இப்பல்கலைக்கழகத்தால் **20.04.2015** முதல் **23.04.2015** வரை "Knowledge Exchange Path Collaboration among Universities, Industries, Educational Institutions and Society: Bridging the Outcome Impact Gap" என்ற தலைப்பில் மூன்றாவது முறையாக பன்னாட்டு கருத்தரங்கம் சென்னை புதுக்கல்லூரியில் நடத்தியது.

**4.2.5 2015–16ஆம் ஆண்டில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்**

**அ. புதிய செயல்திட்டத்தில் முதல் கட்டப்பணி:** 19.11.2014 அன்று கல்விக்குழு கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட செயல் திட்டங்களுக்கான முதல் கட்ட வேலையினை ரூபாய் 30 இலட்சம் செலவில் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆ. இணையதள பன்னாட்டு இதழ்:** பல்கலைக்கழகமானது கல்வியில் புதுமை மற்றும் செயல்பாடுகள் என்ற தலைப்பில் இணையதள பன்னாட்டு இதழ் வெளியீட்டிற்கான தயாரிப்புகளை நிறைவு செய்துள்ளது.

## 4.3 தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்

**4.3.1** தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் தமிழக அரசால் 2002–இல் சட்டம் இயற்றி தொடங்கப்பட்டது. தேசிய அளவில் 10–ஆவது திறந்த நிலைப் பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் திகழ்கிறது. தற்போது சான்றிதழ், பட்டயம், பட்டம், முதுநிலைப் பட்டம் என்ற நிலையில் 135 படிப்புகளை வழங்கி வருகின்றது.

13 பள்ளிகள், 5 சேவை பிரிவுகள், ஒரு மின்னணு ஊடக தயாரிப்பு மற்றும் ஆய்வு மையம் ஆகியவற்றுடன் செயல்பட்டு வருகின்றது.

மதுரை, கோயமுத்தூர், திருச்சி மற்றும் தருமபுரி ஆகிய நான்கு இடங்களில் மண்டல மையங்கள் மற்றும் சமுதாயக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றது. இத்துடன் தமிழகத்தில் 657 கல்வி மையங்கள் வாயிலாக மாணவ,

மாணவியர்களுக்கு கல்விச் சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது.

### 4.3.2 சாதனைகள்

- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் புதுடெல்லியில் உள்ள தேசியத்திறன் மேம்பாட்டுக்கழகத்துடன் 18 வகையான தொழிற்கல்விக்கான பாடத்திட்டங்களை தேசிய தொழில் தர வரிசைகளுடன் இணைக்க ஏதுவாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து உள்ளது.
- அரசின் அனுமதியுடன் இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் பி.எட் (சிறப்பு கல்வி) மாணவர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு நேரடியாக அரசுப் பள்ளிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசின் நிதியுதவியுடன் அயல்நாட்டு

மொழிகள் ஆய்வகம் காணொலிக்காட்சி வசதிகளுடன் கூடிய அயலக மொழிகள் ஆய்வகம் செயல்திறன் மிக்க வகுப்பறைகள், தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், பாடத்திட்ட மேம்பாட்டு பிரிவு ஆகியவை நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழக சிறைக் கைதிகளுக்கு கட்டணச் சலுகையுடன் கூடிய தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.
- சமுதாயக் கல்லூரிகளைச் சார்ந்த **80** ஆசிரியர்களுக்கும், **203** மாணவர்களுக்கும், தொழில் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள், தொழில் மேம்பாட்டு மையம் வாயிலாக நடத்தப்பட்டன.
- ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா, கனடா, எத்தியோப்பியா, ஜெர்மனி, மலேசியா, போலந்து, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து **17** அறிஞர்கள்

இப்பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள் மற்றும் பாடத்திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டிய ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். இவைகளின் வாயிலாக **976** ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயன் அடைந்தனர். மேலும் **390** பாடத்திட்டங்களுக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

- தொலைநிலைக்கல்வி வாயிலாக சிறப்பு கல்வி (Special Education) அளிக்கும் திட்டம் தொடர்பாக புதுடில்லியில் உள்ள இந்திய மறுவாழ்வியல் மன்றத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### 4.3.3 2014–15ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட செயல்பாடுகள்

- மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இப்பல்கலைக்கழக உறுப்புச் சமுதாயக்

கல்லூரிகள் தொழில்சார்ந்த கல்விக்கான அடித்தளக் கட்டமைப்பு வசதிகளான கணினிகள் மற்றும் தையல் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு அரசு சாராத நிறுவனங்கள் தொழிற்சாலைகளில் தொழில்கல்வி பயில ஏதுவாக 40 சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

- இப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 16 வேளாண்மை சார்ந்த வேலைவாய்ப்புத் தரக்கூடிய பாடங்களை தமிழ்நாடு முழுவதும் சமுதாய கல்லூரிகள் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- நூலக மேம்பாட்டிற்காக 20,584 நூல்கள் வாங்கப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட 710 பாட நூல்களுக்கு ஐ.எஸ்.பி. எண் பெறப்பட்டது.

- இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புக்கல்வியியல் மற்றும் மறுவாழ்வியல் புலம் வாயிலாக, இந்திய மறுவாழ்வியல் மன்ற ஒப்புதலுடன் பின்வரும் புதிய வகுப்புகள் துவக்கி வைக்கப்பட்டது.

  1. முதுகலை கல்வியியலில் சிறப்புக் கல்வி.
  2. முதுகலை தொழில் சான்றிதழ் படிப்பில் சிறப்புக் கல்வி
  3. முதுகலைப் பட்டயப்படிப்பில் சிறப்புக் கல்வி.
  4. ஊனமுற்ற குழந்தைகளுக்கான அடிப்படைப்படிப்பில் சிறப்புக் கல்வி
  5. கற்றலில் பின்தங்கிய குழந்தை களுக்கான அடிப்படை கல்வி

- குளோபல் டாக்குமெண்ட் வெரிபிகேசன் என்னும் மென் பொருள் மூலமாக இப்பல்கலைக்கழகம் வழங்கும் பட்டங்கள் / பட்டயங்களின் உண்மைத் தன்மையினை இணையம் மூலமாக இலவசமாக அறிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

### 4.3.4 2015–16ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

- தொலைநிலைக் கல்வி சங்கத்தின் சார்பில் 3 நாட்கள் தேசிய கருத்தரங்கமும், அறிவியல்புலம் சார்பில் கணிதவியலில் 3 நாட்களும் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளது.
- தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை, சென்னை, திருச்சி (ஸ்ரீரங்கம்) ஆகிய மண்டல மையங்களுக்கு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.
- அச்சடிக்கப்பட்ட பாடவரிசைகளுக்கும் மாற்றாக (எண்சார் தகவல் தொழில்நுட்ப) டிஜிட்டல் பாடங்களை நடைமுறைப்படுத்துவது.
- இணைய வழியில் மாணவர் சேர்க்கை முறையினை மேம்படுத்துதல்.

- மைசூரில் உள்ள இந்திய மொழியியல் நிறுவனத்தின் உதவியுடன் கணினித்தமிழ் குறித்த பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.
- தொலைநிலைக் கல்வி வாயிலாக, விலங்கியல், தாவரவியல், வேதியியல், இயற்பியல் தொடர்பான இளநிலைப் பட்டப் படிப்புகள் தொடங்கப்படவுள்ளன.

## 4.4 சென்னை பல்கலைக்கழகம்

**4.4.1** சென்னை பல்கலைக்கழகம் 1857–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5–ஆம் நாள் நிறுவப்பட்டது. முதலில் இது தேர்வுக் குழுவாக உருவாக்கப்பட்டு, பிறகு ஆய்வு மற்றும் கற்பித்தல் ஆகியவை சார்ந்த செயல்பாடுகள் யாவும் 1923–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சென்னை பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டன. தற்பொழுது இப்பல்கலைக் கழகத்திற்கு சென்னைக்குள் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு, மதுரவாயல் (கள ஆய்வகம்) ஆகிய ஆறு வளாகங்கள் உள்ளன. சென்னை பல்கலைக்கழக சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் தனியாக பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து உயர்கல்வி வழங்குகின்ற 73 கற்பித்தல் மற்றும் ஆய்வு துறைகளும், 48 இணைவுபெற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளிட்ட 134 இணைவு

பெற்ற கல்லூரிகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்வி வழங்குகின்ற முதன்மை பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. சென்னை பல்கலைக்கழகம் தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் (NAAC) உயர் மதிப்பீட்டினைத் தொடர்ந்து பெற்று வருவதுடன் பல்கலைக்கழக மானியக் குழுவினால் 'ஆற்றல்சால் பல்கலைக்கழகம்' என்ற அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. தன்னாட்சிக் கல்லூரி என்ற கருத்தைப் பல்கலைக்கழக அளவில் சென்னை பல்கலைக்கழகம்தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தியது. இதனால் தன்னாட்சிக் கல்லூரிகள் யாவும் தமக்கென பாடத்திட்டம், தேர்வுமுறை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. சென்னை பல்கலைக்கழகத்தின் இணைவுபெற்ற **21** தன்னாட்சி கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழக மானியக் குழு சில கல்லூரிகளுக்கு ஆற்றல்சால் கல்லூரி என்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. **1981** இல் தொடங்கப் பெற்ற

தொலைதூரக் கல்வி நிறுவனம், **27** இளங்கலைப் படிப்புகளையும் **21** முதுகலைப் படிப்புகளையும், **18** தொழிற்படிப்புகளையும், **31** ஏனைய படிப்புகளையும் வழங்கி வருகின்றது. மேலும் தொலைதூரக் கல்வி நிறுவனம் ஆப்பிரிக்க மின்னணு இணைப்பு திட்டம் (e-Network Pan African Project) என்ற ஒரு திட்டத்தின் மூலம் முதுநிலை தகவல் தொழில்நுட்பம், இளநிலை வணிக நிர்வாகவியல் ஆகிய படிப்புகளை ஆப்பிரிக்க மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. ஆய்வு தொடர்புடைய நன்மதிப்புடைய வணிகத் துறை நிறுவனங்களின் உதவியுடன் சென்னை பல்கலைக் கழகம் பல தேசிய, பன்னாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி அதன் இணைப்பு நிறுவனங்களையும் பங்கு பெற வைத்துள்ளது.

### 4.4.2 சாதனைகள்

- நமது **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்கு பார்வையின் வாயிலாக நெம்மேலி மற்றும் திருவொற்றியூர் ஆகிய

இடங்களில் இரண்டு பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- மகளிர் கல்வி ஆய்வு, சமுதாயப் பணி, கணினி வலையமைப்பு மற்றும் தகவல் தொழில் நுட்பம், பொருள் அறிவியல் மற்றும் உயிர் தகவலியல் ஆகிய 5 புதிய துறைகள் துவங்கப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழகம் 87 உதவிப் பேராசிரியர்கள், 18 பேராசிரியர்கள், 48 நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் 11 நூலக உதவியாளர்களை நியமனம் செய்து தனது மனித வளத்தை பெருக்கிக் கொண்டுள்ளது.
- காணொலிக் காட்சி வசதியுடன் கூடிய நவீன வகுப்பறைகள், அயல்மொழி ஆய்வகங்கள், திறன் மேம்பாட்டுடன் கூடிய தொழில் முனைவோர் மையம், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழக பேராசிரியர்களை அழைத்தல்,

பாடத்திட்ட மேம்பாட்டு மையம் ஆகியவற்றை நடைமுறைபடுத்தியுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வடிவ கருவிகள் தயாரிக்கும் மையம், சுவாமி விவேகானந்தர் உயர் ஆய்வு மையம், உயர்தர தொழில் நுட்பம் கொண்ட முதுநிலை ஆய்வகம், தொழில் நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான எழுத்துப் பயிற்சி மையம், பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையம், தொழில் நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையம் ஆகியவற்றை நிறுவியுள்ளது.
- கணினித் தடயவியல் மற்றும் தகவல் பாதுகாப்பு ஆய்வு மையம், Neurotoxcity Research, சிறைக் கைதிகளின் மறுவாழ்வுக்கான ஆய்வு மையம் ஆகிய **3**

புதிய ஆராய்ச்சி மையங்களை உருவாக்கியுள்ளது.

- அரசு உதவி பெறும் பல்கலைக்கழகங்களுள் இப்பல்கலைக்கழகம் மட்டும் தான் தொழில் நுட்ப அடைகாப்பு மற்றும் தொழில் வல்லமைத் திறன் மேம்பாட்டு மையங்களை நிர்மானித்துள்ளது.
- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையிலிருந்து PURSE திட்டத்தின் கீழ் ரூ.31.40 கோடியும், உயிர் தொழில் நுட்பத் துறையிலிருந்து ரூ.5.016 கோடியும் பெற்றுள்ளது.
- இப்பல்கலைக் கழகம் 5 காப்புரிமைகள் பெற்றுள்ளது மற்றும் 14 காப்புரிமைகளுக்கு விண்ணப்பித்துள்ளது.
- இப்பல்கலைக் கழகம் மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் ஒற்றைச் சாளர முறை மாணவர்

சேர்க்கை, பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் சென்னை பல்கலைகழகத்தின் இலவசக் கல்வித் திட்டம், மாணவர் காப்பீட்டுத் திட்டம், தொலை நிலை கல்வி முறையில் தொழிற் கல்வி மற்றும் மின்னணு கற்றல், பார்வை குறைவுள்ள மாணவர்களுக்கு பேசும் நூலகம், விளையாட்டுக்கான வசதிகள், மாணவர்களுக்கான வசதிகள், Wi-Fi இணைய வசதி மற்றும் பல்வேறு கட்டண சலுகைகளையும் வழங்கியுள்ளது.

- இப்பல்கலைக்கழகம் தன் மாணவர்களுக்காக Earn While you Learn என்ற திட்டத்தை கடந்த 10 வருடங்களாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

### 4.4.3 2014–2015–ல் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் / செயல்பாடுகள்:

இப்பல்கலைக்கழகம் முனைவர் பட்ட ஆய்வேடுகளை ஒளிநகலாக்கம் செய்தல், மாணவர்

பதிவு மற்றும் தேர்வுகளுக்கு மின் ஆளுகை முறை, மின்னணு (Online) முறையில் கட்டணம் செலுத்துதல், மின்னணு முறையில் தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் விண்ணப்பம் செலுத்துதல், இருப்புப் பதிவு ஆகியவற்றை மின் ஆளுகை மூலம் மேற்கொண்டுள்ளது.

தமிழறிஞர் டாக்டர் ராபர்ட் கால்டுவெல் அவர்களின் 200–வது பிறந்த நாளையொட்டித் தமிழ் மேம்பாட்டு சங்கப் பலகையை உருவாக்கியுள்ளது.

(1) மதங்களுக்கு இடையேயான தொடர்பு மையம், (2) கிராமப்புற வளர்ச்சி மற்றும் போர்திறன் சார்ந்த படிப்பு மையம் (Strategic Studies), (3) தீவிரவாதம், உள் பாதுகாப்பு மற்றும் குற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கான மையம், (4) புலனுணர்வு மற்றும் நடத்தைக்கான மையம், (5) உளநிலை மற்றும் இசை வழி குணமாக்கல், (6) மரபுசார் மற்றும் தரமாக்க ஆய்வகம் மற்றும் (7) பல மொழிகளுக்குரிய சொற்களஞ்சியத் திட்டம் ஆகிய 7 ஆய்வு

மையங்களை ஆற்றல்சால் பல்கலைக்கழகம் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தியுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுத் தொடர்பு மையத்தின் மூலம் 75 வெளிநாட்டு மாணவர்கள் பல பாடப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்பல்கலைக்கழகம் 1 KV அளவில் சூரிய மின் விளக்குகளை சேப்பாக்கம் வளாகத்திலுள்ள மகளிர் விடுதியில் நிர்மாணித்துள்ளது.

ஆற்றல்சார் பல்கலைக்கழகம் II திட்டத்தின் கீழ் 'மூலிமை உயிர் மருந்தியல் ஆய்வு மற்றும் புதிய பொருள் ஆய்வு' மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகம் நூலகத்தை எண்மான வடிவமாக்க (Digitization) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.4.4 2015–16இல் மேற்கொள்ளவிருக்கும் செயல்கள் / திட்டங்கள்:

சென்னை பல்கலைக்கழகம் மின் ஆளுகை மூலம் தாள்கள் இல்லா நிர்வாகத்தை மேற்கோள்ளத் திட்டமிட்டுள்ளது.

## 4.5 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**4.5.1.** 1965ல் தோற்றுவிக்கப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் ஆற்றல்சால் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் 77 துறைகளைக்கொண்டு திறம்பட செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகம், 3 அரசு கல்லூரிகள், 10 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 4 மதுரை காமராசர் பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரிகள், 24 தன்னாட்சிக் கல்லூரிகள், 6 உறுப்புக் கல்லூரிகள், 1 மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரி, 36 சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் 9 அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களை கொண்டு இயங்கி வருகிறது. மேலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி இயக்ககம் வாயிலாக சுமார் 1.20 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இப்பல்கலைக்கழகத்தில் 41 முதுகலை, 35 இளநிலை

ஆராய்ச்சி, 17 பட்டய/முதுநிலை பட்டய/சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இணைப்புக் கல்லூரிகளில் 66 இளநிலை, 45 முதுகலை படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

### 4.5.2 சாதனைகள்

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து தேசிய தர மதிப்பீட்டுக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு தற்போதும் முதல் தரமாக மதிக்கப்பட்டு 'ஏ' தர அங்கீகாரம் கடந்த வருடம் (2014–15) வழங்கியுள்ளது.
- ''உள் தர காப்புறுதி மையம்'' பல்கலைக்கழகத்தில் தனித்தும், ஒருங்கிணைந்தும் இயங்கக்கூடிய ஒரு அமைப்பாகும். இது அனைத்துப் பள்ளிகளின் கல்வித் தரச் செயல்பாடுகளை ஆராய்ந்து தணிக்கை செய்து அதன் தரத்தைத்

தொடர்ந்து மேம்படுத்த ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகிறது.

- **மத்தியக் கருவி பயன்பாட்டு மையம் (Central Instrumentation Centre)**

இந்த மையம் உயர் துல்லிய கடத்தி மின்னணு நுண்ணோக்கி (High Resolution Transmission Electron Microscope), நுண்ணாய்வு மின்னணு நுண்ணோக்கி (Scanning Electron Microscope), அணுவிசை நுண்ணோக்கி (Automic Force Microscope), தரை வழி ஊடுருவும் ரேடார் அமைப்பு முறை (Ground Penetrating Radar System) போன்றவை உள்ளடக்கிய கலை ஆய்வுக் கருவிகளுடன் உபகரணங்களைத் தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த மையம் உலகத்தரம் வாய்ந்த முன்காண் அரங்கு,

கூட்டரங்கு, நவீன செயல்திறன் மிக்க வகுப்பறை, மாணவர் சேவை மையம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக முக்கிய ஆய்வுத்திட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுடன் 2014–15இல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்த மையம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமன்றி இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2000 மாணவ மாணவியர்கள் இந்த மையத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் புதுமையான திரைப்படம் மற்றும் மின்னணு ஊடகக் கல்வி சார்ந்த பிரிவுகளைக் கொண்டு மிகச்சிறந்த கல்வி நிறுவனக் குழுக்களுடன் இணைந்துள்ளது.

- தொலைதூரக் கல்வி மற்றும் சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை மைய மாணவர்களுக்காக அடிப்படை பயிற்சி சமையலறை, அளவு பயிற்சி சமையலறை, பயிற்சி உணவகம், அடுமனை, இனிப்புகள் தயாரிப்புக்கூடம் மற்றும் மாதிரி விருந்தினர் ஓய்வறை போன்ற வசதிகளுடன் உணவக மேலாண்மை ஆய்வக மையம் கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய முறை மூலம் சுமார் 3000 மாணவ மாணவியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயனடைய திட்டமிடப்பட்டுள்ளது.

- **மின் வழி கற்றல் வலைதளம் (e-learning portal)**

  தொலைதூரக் கல்வி இயக்ககம் பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்காக ஒரு எல்லையற்ற, எப்போதும் எங்கேயும் கல்வி மற்றும் நிர்வாகப் பணிகளை பயன்படுத்தும் வசதிகளுடன் கூடிய மின் வழி கற்றலினை

அறிமுகம் செய்துள்ளது. சுமார் **1,00,000** மாணவர்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

- **ஆய்வுத் திட்டப் பணிகள்**

  தற்போது **2014–15** ஆண்டில், **125** ஆய்வுத் திட்டப் பணிகள் **9** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு – கல்வியாளர் கல்லூரி:

  கல்வியாளர் மேம்பாட்டுக் கல்லூரி திட்டப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளை உயர்கல்வி வழங்கும் ஆசிரியர்களுக்கு அளிக்கிறது. **2014–15**ஆம் கல்வி ஆண்டில் **17** பாடங்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு **411** ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் **12**வது திட்ட உதவி மற்றும் பல்கலைக்கழக பிற

நிதியுதவியுடன் மொத்தம் **55** பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த நிகழ்வுகள் **2014–15**ஆம் வருடம் நடத்தப்பட்டது.

- அதிக அளவு பெண் முனைவர்களை உருவாக்குவதற்காக "முல்லை" என்ற பெயரில் பெண்களுக்கென விடுதியொன்று பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவியுடன் ரூ.**62** லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. **24** மணி நேர கம்பியில்லா இணைய வசதி மதுரை காமராசர் பல்கலைக்கழக விடுதிகளில் அனைத்து முதுநிலை மற்றும் ஆய்வு மாணவர்களுக்காக **2014–15**ஆம் கல்வியாண்டு முதல் அமைக்கப்பட்டுள்ளது.

**4.5.3. 2015–16ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்:**

- தேசியத் தகுதித் தேர்வு பெறாத ஆராய்ச்சி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில்

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 12 வது ஐந்தாண்டுத் திட்ட பொது வளர்ச்சி நிதியில் ஒரு பகுதியாக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 125 ஆராய்ச்சி மாணவர்களுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் துணைபுரிகிறது.

- பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மற்றும் தடகள வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் பேர் அமர்ந்து காணக் கூடிய ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு காமராசர் பல்கலைக்கழகத்தில் உள்ள உடற்கல்வித் துறையின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூபாய் 2.40 கோடி 2015–16ஆம் வருடம் ஒதுக்கீடு செய்துள்ளது.

- அயல் மொழி ஆய்வகம், நவீன வகுப்பறை, சுவாமி விவேகானந்தர் உயர் ஆய்வு கல்வி மையம், தொழில் நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையம், பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையம் மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் ஆகியன ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் பல்வேறு திறன்களை மேம்படுத்தும் வகையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பசுமை மற்றும் தூய்மை வளாகம் பிற இடங்களுக்கெல்லாம் முன் மாதிரியாகத் திகழும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 4.6 பாரதியார் பல்கலைக்கழகம்

**4.6.1** பாரதியார் பல்கலைக்கழகம், பிப்ரவரி 1982 ஆம் வருடம் பாரதியார் பல்கலைக்கழக சட்டம் 1981–ன் படி நிறுவப்பட்டது. தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டு குழுவின், மறுமதிப்பீட்டில் ‘A’ தர மதிப்பீடு வழங்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது 37 கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி துறைகளை உள்ளடக்கிய 13 பள்ளிகளைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகமானது 112 இணைவுக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது இவற்றுள், 7 அரசு கல்லூரிகளும், 3 உறுப்பு கல்லூரிகளும் 16 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் மற்றும் 86 சுயநிதி கல்லூரிகளும் அடங்கும். மேலும், ஈரோட்டில் ஒரு முதுகலை கல்வி மையத்தையும் இப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளது. தற்சமயம் 2,58,713 மாணவ மாணவிகள் இப்பல்கலைக்கழக துறைகளிலும், உறுப்பு கல்லூரிகளிலும் மற்றும் தொலை தூர கல்வி பள்ளியிலும் பயின்று வருகிறார்கள். பல்கலைக்கழக

நிதிநல்கைக்குழு தனது சிறப்பு உதவி திட்டத்தின் கீழ் 7 துறைகளுக்கு உதவி வருகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை தனது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 8 துறைகளுக்கு உதவுகிறது. தமிழக அரசு இப்பல்கலையின் இயற்பியல் துறையில் உயர்தர மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி கூடங்ளை நிறுவிடவும் அதன் தற்போதைய தரத்தை உயர்த்துவதற்கும் மற்றும் உயர்தர ஆராய்ச்சி திட்டங்களை வழங்குவதற்குமான ஒரு சிறப்பு மையமாக இத்துறையை தெரிவு செய்துள்ளது.

### 4.6.2 சாதனைகள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தனது இரண்டாவது கட்டத்தில் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு, 16 ஆராய்ச்சி திட்டங்களுக்காக பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன உயிர் அறிவியல்

மையத்தின் வாயிலாக ரூ.7.53 கோடி வழங்கியுள்ளது.

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேம்பாட்டை உயர்த்தும் திட்டத்தின் கீழ் ரூ.9 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் முதன்மை ஆராய்ச்சி திட்டத்தின் வாயிலாக ரூ.3.87 கோடி மதிப்பிலான ஆராய்ச்சித் திட்டங்களை பல்கலைக்கழக ஆசிரியர்கள் பெற்றுள்ளனர். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, மூன்று துரித வழி திட்டங்களையும் இரண்டு பெண் விஞ்ஞானி திட்டங்களையும் வழங்கியுள்ளது.
- பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி (41 ஆராய்ச்சி உதவித் தொகை), பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேம்பாட்டை

உயர்த்தும் திட்டம் **(23** ஆராய்ச்சி உதவித்தொகை**)**, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்துறை புதுமையான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் திட்டம் **(21** ஆராய்ச்சி உதவித்தொகை**)**, பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவி மற்றும் பிற திட்டங்கள் **(525** ஆராய்ச்சி உதவித் தொகை**)** வாயிலாக பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் பெருமைமிகு நிதி உதவிகளை, மேற்கண்ட நிதி நல்கைகளின் வாயிலாக பெற்றுள்ளனர்**.**

- தேசிய ஆசிரியர் கல்விக்குழுவின் அனுமதி பெற்ற முதுகலை கல்வியியல் பட்டப்படிப்பில் முதன் முறையாக **35** மாணாக்கர்கள் முழு நேர கல்வியிலும், **250** மாணாக்கர்கள் தொலை தூர கல்வி வழியிலும் பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர்**.**

**4.6.3 2014–2015ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் திட்டங்களும்**

- இப்பல்கலைக்கழகத்தின் அருகாமையில் அமைந்துள்ள தொழில் கூடங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மீநுண் அறிவியல் (Nano Science) மற்றும் தொழில் நுட்ப துறையில் பாரதியார் மீநுண் புதுமை மையம் (B-NIC) (Nano innovation Centre) உருவாக்கப்பட்டுள்ளது.
- எளிய முறையில் இணைய வழி வாயிலாக, பல்வேறு வகையான கட்டணங்களை செலுத்துவதற்கு மாணாக்கர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சி மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில் அவர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சி

ஆய்வேட்டின் நிலையினை இணைய வழி வாயிலாக அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாணாக்கர்களுக்கான பன்முக சேவை மையம் நிறுவப்பட்டுள்ளது.
- பாரதியார் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கென 4 விடுதியும், மாணவியர்களுக்கென 4 விடுதியும், பன்னாட்டு மாணவ, மாணவியர்கள் தங்க பன்னாட்டு விடுதி ஒன்றும், என மொத்தமாக 9 விடுதிகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் 1110 மாணவிகளும், 850 மாணவர்களும் மற்றும் 9 வெளிநாட்டு மாணவ, மாணவியர்களும் தங்கி பயின்று வருகின்றனர்.
- பல்கலைக்கழகத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய தகுதி தேர்வு நடைபெறும் பல்வேறு தேர்வு மையங்களை கண்காணிக்க

இணையவழி கண்காணிப்பு அறை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

- இளநிலை தொழில்பாடப்படிப்பிற்காக பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு ரூபாய் **1.83** கோடியினை விரிவாக்கம், வேலைவழிகாட்டி மற்றும் மாணவர் நலத்துறைக்கு வழங்கியுள்ளது.
- **200** கணினிகளையும் **4** மேன்திறன் கணினிகளையும் கொண்ட ஒரு பொது கணினி மையம் மாணவ, மாணவியர்களும் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நிறுவப்பட்டுள்ளது.
- அனைத்து மாணவ, மாணவியர்களும் விளையாட்டுகளில் பங்குபெறும் வகையில் விளையாட்டு வளாகங்கள் அனைத்து பல்கலைக்கழக விடுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ரூ.1.85 கோடி நிதி உதவியுடன் மேற்குத் தொடர்ச்சி மலையின் இடம் சார்ந்த மற்றும் அழியும் நிலையில் உள்ள (இருளர்களின்) மொழி குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தொழில் நிறுவனங்கள் சார்ந்த பாடத்திட்டங்களுக்கு “இன்போசிஸ்” நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது
- மகாகவி பாரதியாரைப் பற்றி கற்பதற்கென ஒரு இணையதளத்தினை “டாடா கன்சல்டன்சி” நிறுவனத்துடன் இணைந்து நிறுவியுள்ளது.
- மனித மரபணுவியல் மற்றும் மூலக்கூறு உயிரியல் பாடப்பிரிவு தொடங்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

- நூலக தகவல் அறிவியல் பாடப்பிரிவு மீண்டும் துவக்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**4.6.4. 2015–2016ல் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள்/திட்டங்கள்**

- தொழில் நுட்பம் சார்ந்த சமூக முயற்சியின் மூலம் சமமான மற்றும் தரமான உயர்கல்வியை அனைவருக்கும் அதிக செலவில்லாமல் வழங்குவதற்கான திட்டம் மேற்கொள்ளுதல்.
- பல்வேறு துறை சார்ந்த படிப்புகளில் வளர்ந்து வரும் 500 ஆராய்ச்சி மாணவர்கள் தங்களை ஆராய்ச்சியாளர்களாக மேம்படுத்திட தகவல் ஆழ்தேடல் மற்றும் படங்களை கையாளுதலுக்கான தகவல் மையம் நிறுவிட திட்டமிடல்.
- பல்கலைக்கழக வளாக மற்றும் இணைப்பு கல்லூரி மாணவர்கள் இணைய வாயிலாக தகவல்களை பறிமாறிக் கொள்ளும் வகையில்

75 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் கல்வி இணைய அமைப்பு நிறுவுதல்.

- மாணவ, மாணவியர்களிடையே வகுப்பறையற்ற கல்விமுறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உலகத்தரம் வாய்ந்த திறந்த வழிக்கல்வி மற்றும் இணைய வழி மதிப்பீடு மையம் நிறுவுதல்.
- உயிர் மருத்துவ பயன்பாட்டு மையம் ஒன்றை நிறுவி மேற்கு தொடர்ச்சி மலைகளில் கிடைக்கும் வளங்களின் மூலம் புற்றுநோய் மற்றும் பிற நோய்களுக்கான தீர்வுகளை கண்டறியும் வண்ணம் ஆராய்ச்சி மேற்கொள்ளல்.
- உலகளாவிய போட்டியினை எதிர்கொள்ளும் வகையில் அனைத்துத் துறை மாணவ, மாணவியர்களை தயார் படுத்துவதற்காக வாழ்வு சார் திறமைகளை கற்று கொள்ளும் ஒரு பாடப்பிரிவு தொடங்குதல்.

- கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3.00 இலட்சம் நிதி உதவியோடு “நிதி ஆதார கொள்கைகளை பயிற்றுவிக்க ஒரு மையம்” ஏற்படுத்தல்.

## 4.7 பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**4.7.1** பாரதிதாசன் பல்கலைக்கழகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் 1982 இல் நிறுவப் பெற்றது. பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் மறுதரமதிப்பீட்டில் ‘A’ தகுதியினைப் பெற்றுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு இரண்டு வளாகங்கள் உள்ளன. ஒன்று பல்கலைக்கழக முதன்மை வளாகம். மற்றொன்று காஜாமலை வளாகம். இவை தவிர பாரதிதாசன் மேலாண்மையியல் நிறுவனம் (BIM) திருவெறும்பூரில் இயங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய எட்டு மாவட்டங்களில் 138 இணைவு பெற்ற கல்லூரிகள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 4 மாதிரிக் கல்லூரிகள் மற்றும் 6 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன.

### 4.7.2 பல்கலைக்கழக சாதனைகள் :

- பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து முதுநிலைப் பட்டயம், பட்டயம், சான்றிதழ்ப் பாட நிரல்களை மாற்றுத் திறனாளிகள் மையம் வழங்குகிறது. இத்திட்டத்தின் மூலம் **237** மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.
- அறிவுக் கருவூல மையப் பல்லூடக வாயில், தொழில் நுட்பம் செறிந்த கற்றல் பற்றிய (NPTEL -Phase II) தேசியத் திட்டம் சார்ந்த புதிய காணொலி விரிவுரைகள் மூலம் வளப்படுத்தப்பட்டு வருகிறது.
- தகவல் தொழில் நுட்ப அறிவுசாராத ஆசிரியர்கள் அடிப்படை விழிப்புணர்வு பெறும் வகையில் **30** பேரைத் தேர்வு செய்து SHAKSHAM திட்டத்தின் கீழ் பயிலரங்கம் நடத்தப்பெற்றது. இதன் மூலம் பயன்பெற்ற ஆசிரியர்கள் அவர்களிடம் பயிலும்

மாணாக்கர்களுக்கும் அதனை பயிற்றுவித்தனர்.

- காஜாமலை வளாகத்தில் 1 மெகாவாட் தரைத்தள நிலையிலும் 200 கிலோவாட் கூரைதள நிலையிலும் சூரிய மின் உற்பத்தி செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 500 கிலோவாட் தரைத்தள நிலையிலும் 100 கிலோவாட் கூரைத்தள நிலையிலும் சூரிய மின் உற்பத்திக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- எல்லா வகைக் கட்டணங்களையும் ஆன்லைன் (online) / இணைய வழி மூலம் செலுத்தும் வசதியினை அறிமுகப்படுத்தியது.
- **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் 67ஆவது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் பசுமை வளாகத் திட்டம் தொடங்கப்பட்டது.
- 65 பேராசிரியர்கள் உலகத் தரம் வாய்ந்த விருதுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளனர்.

- ஏறத்தாழ **3594** ஆராய்ச்சிக் கட்டுரைகள் தரம் வாய்ந்த அதிகக் குறிப்பீடு உள்ள ஆராய்ச்சி இதழ்களில் வெளியிட்டுள்ளனர். **28** காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டு அதில் **12** காப்புரிமைகளுக்கு பேராசிரியர்கள் உரிமம் பெற்றுள்ளனர்.
- பல்கலைக்கழகத்தின் மதிப்பீட்டுக் குறியீடு (H Index) **66** என்று SCOPUS கணித்துள்ளது.
- **13** துறைகள் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன.
- **35** பேராசிரியர்கள் **22** நாடுகளுடன் கூட்டு நடவடிக்கை மூலமாக ஆராய்ச்சி பரிமாற்றம், ஆய்வுத் திட்டங்கள், ஆய்வு வெளியீடுகள் செய்து வருகின்றனர்.
- UGC, CSIR, DST, DBT,DRDO,ICSSR,ICMR முதலியவற்றின் நிதியுதவியுடன் கூடிய **304** ஆய்வுத்திட்டப்பணிகள் மூலமாக ரூ. **8298**

இலட்சம் பெற்று பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன.

- வகுப்பறைகள், கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வகங்கள் உள்ளிட்ட பல்கலைக் கழகத் துறைகளுக்குக் குறிப்பிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காகக் கடந்த 4 ஆண்டுகளில் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் 9ஆவது திட்டக்காலச் சிறப்பு நிதியாக ரூ 10 கோடி மற்றும் 12ஆவது திட்ட நிதியாக ரூபாய் 5.34 கோடியை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. ஒரு பேரரங்கம், விடுதி, துறையகங்கள் உள்ளிட்ட 12 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையிலும் செயல்திறன்மிக்க வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

### 4.7.3 எதிர்காலத் திட்டங்கள் :

- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் 1.25 இலட்சம் மரக்கன்றுகள் (1000 / கல்லூரி)

நடுவதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

- 2 மெகா வாட் அளவில் சூரிய சக்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் திட்டம் செயல் படுத்தப்படவிருக்கிறது.
- பல்கலையின் பல்வேறு துறைகளிலுள்ள ஆராய்ச்சி உபகரணங்களை திரட்டி ஓர் ஒருங்கிணைப்பட்ட ஆய்வக வசதியினை உருவாக்கி பல்லைக்கழக துறை மற்றும் பல்கலையின் இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் அமைக்கப் பெற உள்ளது.
- ‘‘சுவச் பாரத்’’ திட்டத்தைக் கருத்தில் கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இதன்மூலம் மக்கும் மற்றும் மறுபுதுப்பிப்புக் கழிவுகளை உயிரி – ஈரவளியாக்கம் (Bio methenation) உயிரியவளி (Biogas) மற்றும்

ஆற்றல் உற்பத்தி செயற்பாங்கில் ஈடுபடுத்திப் பயன்பெற முடியும்.

## 4.8 அழகப்பா பல்கலைக்கழகம்

**4.8.1** **1985–ம்** ஆண்டு மாநிலப் பல்கலைக்கழகமாக தோற்றுவிக்கப்பட்ட அழகப்பா பல்கலைக்கழகம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் அங்கீகாரத்தையும், தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் "**A**" தரமதிப்பீட்டினையும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் **11** கற்றல் பள்ளிகள், **24** துறைகள், **7** மையங்கள் மற்றும் இரண்டு பல்கலைக்கழக கல்லூரிகளான கல்வியியல் கல்லூரி மற்றும் உடற்கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. மேலும் பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் **31** இணைப்புக் கல்லூரிகளும், **5** மாலை நேரக் கல்லூரிகளும், ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் உறுப்புக்கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. சுமார் **1,20,000** மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வழி மூலம் உயர்கல்வி பயின்று

வருகின்றனர். மேம்பட்ட கல்வியினை உறுதி செய்யும் வகையில் பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகளிலும் இணைவுபெற்ற கல்லூரிகளிலும் தொடர் உள் மதிப்பீடு முறையும், விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறையும் **(CBCS)** நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அழகப்பா பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் **(UGC–Special Assistance Programme)** கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆறு துறைகளும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையின் ‘‘அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டு நிதி’’ **(DST -FIST)** திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மூன்று துறைகளும் செயல்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகம் **14,140** சதுர மீட்டரில் எட்டு தளங்களுடன் கூடிய அறிவியல் வளாகம், **2,550** சதுர மீட்டரில் தலா இரண்டு கலையரங்கங்கள் உட்பட,

ஒரு இலட்சம் சதுர மீட்டருக்கான உட்கட்டமைப்பினை பெற்றுள்ளது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட நிதியின் மூலம் ரூ.478.32 இலட்சம் மதிப்பீட்டில் மாணவர்களுக்கான விடுதி மற்றும் பிற வசதிகள் கொண்ட கட்டடங்கள், 2013–14–ம் ஆண்டில் முடிக்கப்பெற்றுள்ளன.

**4.8.2 தொலைநிலைக் கல்வி மற்றும் ஒருங்கிணைப்பு வழி வகைப் படிப்புகள்:**

அழகப்பா பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக இந்தியாவின் அனைத்து பகுதிகளிலுள்ள இளையோர் மற்றும் முதியோர் என 78,000 பேர் அவர்களது பகுதியில் கல்வி வாய்ப்பினைப் பெற்று வருகிறார்கள். மொத்தம் 204 படிப்பு மையங்கள் வாயிலாக இப்பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி செயல்பட்டு வருகின்றது. மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன்வளர் தேவையின்

அடிப்படையில் ஒருங்கிணைப்பு வழி வகைப் படிப்புகளில் **48** வகையான சான்றிதழ், பட்டயம், இளங்கலை, முதுகலை பட்டயப் படிப்புகள் மற்றும் முதுகலை பட்ட அளவில் உணவக நிர்வாகம், ஆடை வடிவமைப்பு, மருத்துவம்சார் அறிவியல், கடல்சார் மற்றும் வானூர்தி அறிவியல், உயிர் நுட்பவியல் போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளை புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.8.3 சாதனைகள்:

- **2012** மற்றும் **2013**ஆம் கல்வியாண்டுகளில் “நுண்கலை மையம்”, “ஆற்றல் அறிவியல் துறை” மற்றும் “வாழ்நாள் கல்வி பயிலல் துறை” ஆகியன அந்தந்த துறையில் முறையான உயர்கல்வி அளிக்கும் பொருட்டு தொடங்கப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் புதுமைப் பாடத் திட்டத்தின் அடிப்படையில்

அதன் நிதியுதவியுடன் இளநிலை கல்வியியலில் ‘‘சிறப்புக் கல்வியியல்’’ **(Special Education)**, ‘‘மதிப்புக்கூட்டு வரி மற்றும் சேவை வரி’’ ஆகிய முதுநிலை பட்டயப்படிப்பு **(PG Diploma in VAT and Service Tax),** முதுகலை நிர்வாகவியல் (ஊர்தியியல் மேலாண்மை) ‘‘**MBA (Logistics Management)**’’ என்ற படிப்புகளும், மற்றும் ‘‘ஸ்டெக்சுரல் பார்மோகோஜெனாமிக்ஸ்’’ **(PG Diploma in Structural Pharmacogenomics)** என்ற முதுகலைப் பட்டயப்படிப்பும் புதுடில்லி பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

- மத்திய அரசின் திறன் மேம்பாட்டு இயக்ககத்தின் அங்கமான உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை அமைப்பின் **(Infrastructure Leasing and Finance**

**Services)** உதவியுடன் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் பிரிவுகளான ஆடை உற்பத்தி, தையல் பயிற்சி, நவீன பின்னலாடை வடிவமைப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் கணினி கையாளுமை போன்ற தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புகள், வேலையில்லா இளைஞர் மற்றும் மூத்த குடிமக்களுக்கு வழங்கும் பொருட்டு ''அழகப்பா பல்கலைக்கழக திறன் மேம்பாட்டு மையம்'' ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- பன்னாட்டு ஒருங்கிணைப்பு ஆய்வுத் திட்டங்கள் மற்றும் பெரும் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்வதற்கென, அழகப்பா பல்கலைக்கழகம் ரூ.**5** கோடி மதிப்பீட்டில் ''அழகப்பா பல்கலைக்கழக ஆய்வு நிதி'' ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.
- அழகப்பா பல்கலைக்கழகம், அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன், தென் கொரியா, சீனா,

ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், மஸ்கட், மலேசியா, சிங்கப்பூர், கிரீஸ் மற்றும் இந்தியாவின் அனைத்துப் பகுதி கல்வியாளர்களையும் அழைத்து கடந்த நான்கு ஆண்டுகளில் 400–க்கும் மேற்பட்ட பன்னாட்டு கருத்தரங்குகள்/ மாநாடுகள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளது.

- பல்கலைக்கழகத்தில் 40 பன்னாட்டு மற்றும் தேசிய தினங்கள் ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.
- பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களைப் பன்னாட்டுத் தரத்திற்கு இணையானதாக உருவாக்குவதற்கு பல்வேறு நாடுகளிலிருந்து முப்பது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தால் அழைக்கப் பட்டு, பல்வேறு துறைகளின் பாடத் திட்ட சீரமைப்பிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

- தேசிய ஆய்வுத் திட்டம் மற்றும் ஆய்வுத் தரத்தினை மதிப்பீடு செய்யும் ஸ்கோபஸ் (SCOPUS) தரவுதள கணக்கீட்டின் அடிப்படையில், அழகப்பா பல்கலைக்கழகம் பன்னாட்டு கூட்டு ஆய்வு வெளியீட்டில் இந்திய அளவில் முதன்மையான 50 பல்கலைக்கழகங்களில் மூன்றாவது இடத்தினை பெற்றுள்ளமைக்காக, பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியற் செம்மை ஊக்குவிப்புத் (PURSE) திட்டத்தின் கீழ் ரூ. 6.00 கோடி ஆய்வு வளர்ச்சி நிதியாக இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை வழங்கியுள்ளது .
- பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு, இயற்பியல், தொழில் வேதியியல் மற்றும் உயிர் நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு 2012–13, 2013–14 ஆகிய ஆண்டுகளில் தலா 5 ஆராய்ச்சி மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிதி

நல்கைக்குழுவின் – அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி (UGC- BSR Research Fellowship) உதவித்தொகையினை வழங்கியுள்ளது.

- பல்கலைக்கழகம் கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு நிதி நல்கை குழுக்களிடமிருந்து ரூ.12.80 கோடியினை ஆய்வு நிதியாக பெற்றுள்ளது.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ஆய்விற்கான விருதினை 2013–14ஆம் ஆண்டில் இரண்டு உதவிப் பேராசிரியர்கள் பெற்றுள்ளனர்.
- பல்கலைக்கழகத்தின் இயற்பியல் மற்றும் தொழில் வேதியியல் துறைகள், பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்பு நிதி உதவி பெறும் திட்டத்தின் முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கான உயர்வினை பெற்றுள்ளன.

- அழகப்பா பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக வணிகக் கூட்டிணைவு மையம் தொழில் நுட்பம் மற்றும் கல்விசார் எழுத்துப் பயிற்சி மையம், மாற்றுத் திறனாளிகளுக்கான பன்முக மாதிரி பொருள் உற்பத்தி மையம், பல்கலைக்கழக – தொழில் கூட்டிணைவு மையம், உயர் ஆய்வக வசதி கொண்ட நுண்ணுயிரி மையம் மற்றும் சுவாமி விவேகானந்தா உயர் ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் ஆகியன தொடங்கப்பட்டுள்ளன.

**4.8.4 2014–15ஆம் ஆண்டில் மேற்கொண்ட நடவடிக்கைகள்/திட்டங்கள்:**

- எம்.ஏ (இதழியல் மற்றும் பொதுத் தொடர்பியல்), முதுநிலை கல்வியியல் ஆகிய முழு நேரப் படிப்புகளும், தொலைநிலைக் கல்வி வாயிலாக இளங்கலை கல்வியியல் படிப்பும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தின் மென்பொருள் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப படிப்புச் சூழலை பல்கலைக்கழக வளாகத்தில் முழுமையாக உருவாக்கும் நோக்கில் ரூ.14.23 இலட்சத்தில் **Wi-Fi** வசதி பகுதியாக செயல்படுத்தப் பட்டுள்ளது.
- பல்கலையின் மொத்த உயர் அழுத்த மின்சாரத் தேவையில் 10 சதவீதத்தினை சூரிய ஒளியின் மூலம் பெறுவதற்காக ரூ.15 இலட்சம் செலவில் சூரிய ஆற்றல் உற்பத்தி உபகரணங்கள் நிறுவுவதற்கான பணி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் துவங்கப்பட்டுள்ளது.
- ரூ.113.84 இலட்ச ரூபாய் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுமம் (UGC), உயிரி

தொழில்நுட்பத்துறை (DBT), போன்ற பல்வேறு நிதி நல்கை நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சித் திட்ட நிதியாகப் பெறப்பட்டுள்ளது.

- அமெரிக்காவின் புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகம் மற்றும் மெக்சிகோவின் பலவகை பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.
- புதுடில்லி பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ரூ.1.85 கோடி நிதி உதவியுடன் இளங்கலை தொழில் படிப்பில் (B.Voc) நவீன ஆடை அலங்கார தொழில் நுட்பம் மற்றும் மென்பொருள் மேலாண்மை ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ஆசிரியர்கள் புத்துணர்வு திட்டத்தின்

**(Faculty Recharge Programme)**கீழ் ஒரு ஆசிரியரும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் ஆசிரியர் ஊக்குவிப்பு (Inspire Faculty) திட்டத்தின் கீழ் ஒரு ஆசிரியரும் அழகப்பா பல்கலைக்கழக தொழில் வேதியியல் துறையில் சேர்ந்துள்ளனர்.

- பல்கலையின் மூன்று பேராசிரியர்கள் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் **2014–** ஆம் ஆண்டிற்கான ஆய்வு விருதினைப் பெற்றுள்ளனர்.
- ரூ.**250** இலட்சத்தில் மேலாண்மைப் புலக் கட்டடம் கட்டப்பட்டு வருவதுடன், ரூ.**50** இலட்சம் செலவில் பல்கலைக்கழகத்தில் வளாக சுற்றுச் சுவர்/கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.
- **2014–15** ஆம் கல்வியாண்டில் பத்து சர்வதேசக் கருத்தரங்குகளும்,

முப்பத்திரெண்டு தேசியக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. மேலும், நாற்பத்தி மூன்று பன்னாட்டு மற்றும் தேசிய நாட்கள்/ நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றுள்ளன.

- 2014–15ஆம் ஆண்டில் மூன்று அரசுக் கல்லூரிகள் உட்பட மொத்தம் ஐந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் இணைவினை பெற்றுள்ளன.

**4.8.5. 2015–16ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்:**

- பல்கலையின் மென்பொருள் உட்கட்டமைப்பு வசதி மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சார்ந்த சூழ்நிலையினை முழுமையாக்க, முழுமையான கம்பியில்லா இணைய வசதியினை ரூ.30 இலட்சம் நிதியில் பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்படுத்துதல்.
- தேசிய அறிவு வலைதளத்தின் மூலமாக பெறப்படும் 1 ஜிகா பைட் இணைய வசதியினை

முழுமையாக பயன்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

- பல்கலைக்கழக பன்னாட்டு உறவு மேம்படுத்தல் மையத்தின் மூலமாக பன்னாட்டு கூட்டு ஆய்வுகளை மேம்படுத்தி, ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களின் பரஸ்பர பரிமாற்றத்திற்கு வழி வகுத்தல்.
- பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் கணிதவியல், கடலியியல் மற்றும் கடலோரவியல் துறைகள் பெறவும் தலா ரூ.150 இலட்சம் நிதி உதவி பெறுவதற்கு தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இதனால் மொத்தம் பல்கலைக்கழகத்தின் ஆறு துறைகள் இந்த நிதி உதவி பெற தகுதி பெற்றுள்ளன.
- கௌசல் (KAUSHAL) திட்டத்தின் கீழ் பட்டயம், சிறப்புப் பட்டயம் இளங்கலை, முதுகலை மற்றும் ஆய்வியல் முனைவர்

தொழில் படிப்புகளை மேம்படுத்த திறன் வளர் மையம் ரூ.500 இலட்சம் கோரி பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு கருத்துரு சமர்ப்பித்துள்ளது.

- பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத்திறன் அதிகரிக்க "Finishing School", மற்றும் கடலோரப் பகுதியினைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தினைப் பெருக்கும் பொருட்டு மீனவ பெண்களுக்கான மாற்று வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய திட்டங்களை தொடங்க ரூ.2.50 கோடிக்கான கருத்துரு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களின் வேலைவாய்ப்புத்திறனை மேம்படுத்துவதற்காகவும் மாணவர்களிடையே சேர்ந்து படித்தல் மற்றும் குழு விவாதத்தை ஊக்குவிப்பதற்கும் இளைஞர்களை வழிப்படுத்துவதற்கும் அழகப்பா

பல்கலைக்கழக தன்னார்வ படிப்பு மையம் தொடங்கப்படவுள்ளது.

- அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு பல்வகை மாற்றுத் திறனாளி உபகரணங்கள் உற்பத்தி மையத்தில் தயாரிக்கப்படும் கருவிகளை பயன்படுத்துதலில் கற்பிக்க பள்ளி ஒன்று தொடங்கப்பட உள்ளது.

## 4.9 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

**4.9.1** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாநிலத்தின் மகளிர் கல்வியை எல்லா நிலைகளிலும் செயல்படச் செய்தல், மகளிரது ஆய்வு வாய்ப்புகளைப் பெருக்குதல் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல், ஆலோசனைச் சேவைகளை நல்குதல் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களாகும். அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 5 பள்ளிகளை உள்ளடக்கிய 16 துறைகளும், சென்னை, மதுரை ஆகிய 2 இடங்களில் ஆய்வு விரிவாக்க மையங்களும் இயங்கி வருகின்றன. பல்கலைக்கழகத்தில் 11 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. அவற்றுள் 2 அரசு கல்லூரிகள், 2 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 2 உறுப்புக் கல்லூரிகள், 5 சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன. பின்தங்கிய,

மலைவாழ் பெண்மாணாக்கியரின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் எட்டு சமூகக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

### 4.9.2 சாதனைகள்

- இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் தொழில்நுட்பக் கட்டமைப்பு உதவி கிடைத்துள்ளது. பயன்பாட்டு உயிரித்தொழில்நுட்ப ஆய்வு மையத்தின் கீழ், தாவரஞ்சார் நானோ பொருட்களின் ஒருங்கமைப்பு, ஒற்றைத் தலைவலிக்கான ஒற்றை நியூக்ளியோடைட்டைப் பரிசீலித்தல், எலும்புகள் தேய்வடையும் நோய்க்கு உரிய மரபணு தேர்வு செய்து சோதித்தல், சூழல் ஒத்திசைவு தாவரங்களைப் பாதிக்கும் பூச்சிகளைக் கொல்லக்கூடிய, விவசாயத்துக்குப் பயனுடைய நாடாப்புழுக்களை மண்ணிலிருந்து

பிரித்தெடுத்தல் ஆகியன முற்றுப் பெற்றுள்ளன.

- நாவல்பழ விதையின் உள் அடுக்கிலிருந்து தங்கநிற மஞ்சள் நிறமேற்றியைப் பிரித்தெடுத்து, நுண்கிருமிகளுக்கு எதிரானதும் சுற்றுச்சூழல் ஒத்திசைவு உடையதுமான ஆடை தயாரிப்புச் சாயத்துக்கான (Syzygium cumini) காப்புரிமை ஏற்கப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழக மின்னூடக வழி கட்டணம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தி உள்ளது. கட்டணம் செலுத்துவதற்கு உள்ள இம்முறை மாணாக்கியருக்கும், கல்விக் கூடத்திற்கும் பலனளிப்பதாக உள்ளது.
- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் சர்வதேச மையத்தில், தியானம், இசை, நாட்டுப்புறவியல், நடனம், இந்தியப் பண்பாடு

மற்றும் ஆயுர்வேத அறிவியல்சார் சான்றிதழ்ப் பாடங்கள் வழங்கப்படுகின்றன.

- கல்வி மற்றும் கல்விசார் அறிவியல்களுக்கான இந்தியச் சமூக ஆய்வு மையம் என்னும் தொழில்நுட்ப அமைப்பைப் பதிவு செய்துள்ளது. இவ்வமைப்பு, பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி உதவியுடன், ‘மனித வள மேம்பாட்டிற்கும், நிர்வாகத்திற்குமான கல்வி’ என்ற பொருளில் **14.11.2014** மற்றும் **15.11.2014** ஆகிய நாட்களில் தேசியக் கருத்தரங்கை நடத்தியது.

### 4.9.3. 2014–15ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

- பல்கலைக்கழக மானியக்குழுவின் மெய்க்கற்றல் (Virtual Learning) முறை பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது.
- ‘SOUL’ எனும் மின் பொருளின் உதவியுடன், பல்கலைக்கழக நூல்கள் யாவும் கணினிமயமாக்கப்பட்டன. பல்கலைக்கழக

நூலகத்தில் **60,000** நூல்கள் உள்ளன. நூலகத்தில் அவற்றை – மின்னூடல் பொது நோக்குப் பட்டியல் வழி பார்வையிட முடியும். பல்கலைக்கழக மானியக்குழு infonet, வலை இதழ்களை பெறுவதற்காக **5** இணைய தளங்களை இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. **17000**–க்கும் அதிகமான வலை இதழ்கள், இப்பல்கலைக்கழக நூலகத்தில் கிடைக்கிறது.

- பல்கலைக்கழகம் மற்றும் இணைவுக் கல்லூரிகளைச் சார்ந்த மாணாக்கியர் மாநில அளவில் தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்று, பதக்கங்கள், பணப் பரிசுகள் பெற்றுள்ளனர். பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தியானம் மற்றும் கபடிப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்றுள்ளனர். தமிழக அரசின் விளையாட்டுத் துறை உதவித் தொகையைப் பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழக மானியக்குழு, உள் விளையாட்டு அரங்கு அமைத்தற்கு ரூ.80 இலட்சம் நிதி நல்கியுள்ளது.

- கிராமப்புற மகளிருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சுவாமி விவேகானந்தா மையத்தின் மூலம் உலகளாவிய நன்னெறி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- காணொலி காட்சி வசதியுடன் கூடிய செயல்திறன் வகுப்பறையானது தரமான இணையவழி கற்றலுக்கு உதவுகிறது.
- பாடத்திட்ட மேம்பாட்டு மையம் பாடத்திட்டத்தை உலக தரத்திற்கு உயர்த்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.
- கிராமப்புற மாணாக்கியரின் தகவல் தொடர்பு திறனை மேம்படுத்த அயல்மொழி ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளது.

- தொழில்முனைவு மேம்பாட்டு பிரிவு, மாணாக்கியரது தொழில் முனையும் ஆற்றலை மேம்படுத்தும் வண்ணம், திறன் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. மண்பாண்டங்கள் செய்தல், நகைகள் செய்முறை, உணவு தயாரிப்பு முறை, காளான் வளர்ப்பு, யூகலிப்டஸ் எண்ணெய் எடுத்தல், அடுமனை பொருட்கள் தயாரித்தல், பயன்படாத துணிகளிலிருந்து கால் மிதியடி தயாரிக்கும் முறை, எளிய முறையில் எண்கணித தகுதித் தேர்வு, ஆகிய குறுகிய பாடங்கள் நடத்தப்படுகின்றன.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து திறனார்ந்த பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டத்தின் கீழ் கற்பித்தல், ஆய்வு செய்தல் ஆகிய தளங்களில் ஆசிரியர்களும் மாணக்கியரும் மிகுந்த பயன் பெற்றனர்.
- தொழில்நுட்பம், அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையம் நிறுவப்பட்டு

அதன்வழி பயிற்சி திட்டங்கள், கணினி செயலாக்க இடையூறு அகற்றும் பயிற்சிகள் மற்றும் அறநெறி சார்ந்த பயிலரங்கு ஆகியன நடத்தப்பட்டன.

- சுற்றுச் சூழலை பாதிக்காத நெசவாலைத் திட்டங்களின் முக்கியத்துவம் குறித்த கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தொலைதூரக் கல்வி வழியாக இளங்கலைக் கல்வியியல் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு தொலைநிலைக் கல்வி மையங்கள் தமிழகத்தில் திறக்கப்பட்டுள்ளன.

**4.9. 42015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்பாடுகள்/ திட்டங்கள்**

- மனநலப்பிறழ்வினர் சிறப்புக் கல்விப் பாடப்பொருளில் எம்.பில்., பிஎச்.டி, ஆகிய படிப்புகளைத் தொடங்குதல்.

- தாவரங்கள் நுண்பொருட்களின திறனறிதலுக்கான கருவி வசதியை அதிகரித்தல். ஒற்றைத் தலைவலிக்கான மாற்று மருந்தை ஆய்வகத்தின் உள்ளும் ஆய்வகத்துக்கு வெளியிலும் சேரித்தல். எலும்புகள் தேய்வடையும் நோய்க்கான மரபணுப் பிறழ்வினை இனம் காணுதல். நீரிலிருந்து நைட்ரேட்டுகளைப் பிரித்தெடுக்கும் தாவரங்களுக்கும் மற்றும் நுண்ணுயிரிக்கும் எதிரான செயல்பாட்டினைக் கண்டறிதல். தாவரங்களைப் பாதிக்கக்கூடிய பூச்சிகளைச் சேகரித்து அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் உயராய்வுகளைச் செயல்படுத்தல்.
- பெருந்தகவல் அனலிட்டிக்கல் மையம் (Bigdata Analytics Centre) பயோமெட்ரிக் அங்கீகார மையம் நிறுவுதல்

- கொடைக்கானல் வாழ் மகளிருக்கு, தகவல் தொடர்புத் தொழில்நுட்ப சேவை குறித்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தல்.
- கல்விசார் அறிவியல்களில் ஆய்விதழ் ஒன்றினைப் பல்கலைக்கழகம் மறுபார்வை இதழாகத் தொடங்குதல்.
- பல்கலைக்கழகம் சில்லறை வணிக நிர்வாகம் டாலி வணிக ஒப்பந்த சேவை பல்லூடகம் மற்றும் இயங்குருவப் படம், கணினி வன்பொருள் ஆகிய பாடங்களைத் தாட்கோ நிதியுதவியுடன் நல்குதல்.
- பல்கலைக்கழக அச்சகம் ஒன்றைத் தொடங்குதல்.
- குறைந்தது இரண்டு வெளிநாட்டு மொழிகளில் மாணாக்கியர் தேர்ச்சி பெறும் வண்ணம் அனைத்துலகப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்.

- பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம், பிற சிறந்த நிறுவனங்களுடன் மின்னூடகம் வழியாக தொழில்நுட்ப ஒருங்கிணைப்புடன் கற்பித்தல்.

## 4.10 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**4.10.1.** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக சட்டம் 1990–ன் மூலம் இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் 26 துறைகள் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் கீழ் 32 உதவி பெறும் கல்லூரிகள், 29 சுயநிதிக் கல்லூரிகள், 7 தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் 3 அரசு கல்லூரிகள் உள்ளிட்ட 64 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. இவைத்தவிர 4 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 6 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் 20 சமுதாயக் கல்லூரிகளும் உள்ளன.

### 4.10.2 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள்

இப்பல்கலைக்கழகம் நாகம்பட்டி, கோவிந்தபேரி, சங்கரன்கோவில், புளியங்குடி,

திசையன்விளை, பணகுடி ஆகிய ஆறு இடங்களில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகளை நிறுவி கிராமங்களில் வாழும் ஏழை, மற்றும் பெண்களுக்குக் குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்கி வருகின்றன. இவைதவிர சாத்தான்குளம், நாகலாபுரம், கன்னியாகுமரி மற்றும் கடையநல்லூர் ஆகிய நான்கு இடங்களில் மனோன்மணியம் சுந்தரனார் உறுப்புக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

### 4.10.3 சாதனைகள்:

- பல்கலைக் கழகத்திலுள்ள நூலகம் முற்றிலுமாக கம்பியில்லா இணையதள வசதி கொண்டது. பார்வையற்றோரும் பயன்படுத்தக்கூடிய மென்பொருள் நூலகம் செயல்படுத்தப்படுகிறது.
- UGC, DST, CSIR, ICSSR போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சிக்காக நிதி

பெறப்பட்டு, பல துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

- பல்கலைக்கழக நிதி நல்கையின் உதவியுடன் 100 KW அளவில் சூரிய ஒளி மேம்பாட்டுத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
- பள்ளிக்கல்வி நிறைவு செய்த (10–ம் வகுப்பு) கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தகுதியை மிகுதிப்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரிகள் இயக்ககத்தை நிறுவியது. இவ்வியக்ககத்தில் 20 சமுதாயக் கல்லூரிகள் ஏற்பு அங்கீகாரம் பெற்றுள்ளன. இக்கல்லூரிகளின் மூலம் குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி, விமான பயணச்சீட்டு மற்றும் பயணமேம்பாடு, சிலம்பம், கட்டுமானத் தொழில், தீயணைப்பு மற்றும் தீயை கட்டுப்படுத்துதல் போன்ற வேலை வாய்ப்பு மற்றும் திறன் அடிப்படையிலான

ஓராண்டுகால பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

- காணொலி காட்சி வசதியுடன் கூடிய நவீன செயல்திறன் மிக்க வகுப்பறைகள், அயல்மொழி ஆய்வுக்கூடங்கள் வாயிலாக பிரஞ்சு மற்றும் ஜெர்மனி மொழிகள் மாணவர்களுக்கு கற்றுத் தரப்படுகின்றது.
- தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் மூலமாக தொழில் முனைவோர் திறன்பயிற்சி, தலைமைப் பண்பு, ஆளுமை வளர்ச்சி போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து சிறந்த பேராசிரியர்களை அழைத்தல், பாடதிட்ட மேம்பாட்டு மையம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4.11 பெரியார் பல்கலைக்கழகம்

**4.11.1** சேலம் மாவட்டத்தில் பெரியார் பல்கலைக்கழகம், 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தந்தை பெரியார் என்று அன்புடன் அழைக்கப்படும் சிறந்த சமூகசீர்திருத்தவாதியான திரு. ஈ.வே. ராமசாமி அவர்களின் பெயரைப் இப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் இயங்கி வரும் 13 அரசு கல்லூரிகள், 4 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 5 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 70 சுயநிதிக் கல்லூரிகளை உள்ளடக்கிய 92 இணைவுக் கல்லூரிகளில் நடத்தப்பெறும் பல்வேறு இளங்கலை, முதுகலைப் பாடப்பிரிவுகளில் சுமார் 1.5 இலட்சம் மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர். மேலும் 11 சமுதாயக் கல்லூரிகள் வாயிலாக இப்பல்கலைக்கழகம் பல்வேறு திறன் மேம்பாட்டு பட்டயப்படிப்புகளை வழங்கி வருகிறது.

இப்பல்கலைக்கழகத்திலுள்ள 24 துறைகள் வாயிலாக விருப்பம் சார்ந்த தரமதிப்பீட்டு திட்டத்தின் கீழ் பல்வேறு முதுகலைப் பாடப்பிரிவுகள், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் நடத்தப்படுவதுடன், பட்டயப் படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தர்மபுரியில் உள்ள முதுகலை விரிவாக்க மையம் 6 முதுகலை படிப்புகளை நடத்தி வருகிறது.

### 4.11.2 நோக்கங்கள்

- ஒருங்கிணைந்த வளர்ச்சியுடன் கூடிய உன்னத நிலையை எவ்வித சமரசமும் இன்றி அடைதல்.
- சமுதாயம் பயன்பெறும் வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- கற்றல் கற்பித்தல் முறையை மாணவர்களும் பங்குகொள்ளும் வகையில் அமைத்தல்.
- கல்வி சம்மந்தப்பட்ட அனைவரையும் அறிவாக்க சமுதாயத்திற்கு ஏற்றவாறு

இருப்பதற்கு கல்வி சார்ந்த பொருண்மைகளில் பங்கேற்கச் செய்தல்.

- துறைகளுக்கு இடையேயான மற்றும் பல்வேறு துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- மாணவர்களுக்கு சமுதாய தார்மீக பொறுப்புணர்வு ஊட்டுதல்.

### 4.11.3 சாதனைகள்

- உறுப்பு மற்றும் சமுதாயக் கல்லூரிகள் அமைக்கப்பட்டது
- மாணவர்கள் பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டது
- வலைதள தொடர்பு வசதி
- பல்கலைக்கழக தர உறுதி பிரிவு
- கண்டுபிடிப்பு உரிமம் – முனைவர் ஆர். பாலகுருநாதன் மற்றும் முனைவர் பி. இந்திரா அருள்செல்வி ஆகியோர் பெற்றுள்ளனர்
- மகளிர் கல்வி மையம்

- மகளிர் நல மையம்
- ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம்
- மாணவர் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டம்
- மாணவர் குறைதீர்க்கும் மையம்
- வேலைவாய்ப்பு மையம்
- முன்னாள் மாணவர் சங்கம்
- மருத்துவ நல மையம்
- முதுநிலை விரிவாக்க மையம்
- பேராசிரியர்கள் அயல்நாட்டுக்கு கல்விப் பயணம் மேற்கொள்ளல்
- பல்கலைக்கழகத்தில் பல பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தல்.

**4.11. 42014–15இல் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்.**

- தேசியத் தரமதிப்பீட்டுக் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு 'A' தரம் வழங்கியுள்ளது.

- பன்முகப்பாட ஆராய்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் புலங்களாக மாற்றப்பட்டுள்ளது. புலங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை யிடுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் முதல்வர்கள் (Dean) நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிடவும், தவறுகளை களையவும் விடைத்தாள்களில் பட்டைக் குறியீடு தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தருமபுரி மாவட்ட படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு தொழில் மற்றும் மொழித்திறன் பயிற்சிகள் SEDP திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வருகின்றன.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்பு உதவித் திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் **3** துறைகள் உதவி பெற்றுள்ளன.

- துணிநூல் மற்றும் ஆயத்த ஆடை வடிவமைப்பு துறை மற்றும் ஆற்றல் சார் படிப்பு துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- சிறப்பு திறன் கொண்ட கல்லூரிகளுக்கான தகுதிநிலை பெறுவதற்கான தேர்விற்கு 7 இணைவு பெற்ற கல்லூரிகளிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு பல்கலைகழக மானியக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- விலங்கியல் துறை ரூபாய் 80 இலட்சத்திற்கான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையிடம் சமர்ப்பித்துள்ளது.
- 40 வயதிற்குட்பட்ட உதவி பேராசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான திட்டம் நடத்தப்பட்டு வருகின்றன.
- ஆராய்ச்சித் திட்ட கருத்துருக்கள் எழுதவும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதவும் இளம் ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சி

மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

- பல்லைக்கழக நூலகங்களில் வானொலி அலைக்கற்றை அறியும் தொழில்நுட்பம் அமைக்கப்பட்டுள்ளது. புதிய தரவு தளங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.
- இளங்கலை தொழில்சார் (B.Voc.) பட்டப்படிப்பினை துணிநூல் மற்றும் உணவு அறிவியல் பாடங்களில் 2015 ஆம் ஆண்டு முதல் வழங்க பல்கலைக்கழக மானியக்குழு 1.7 கோடி பணத்தினை ஒப்பளித்துள்ளது.

## 4.12 திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.12.1** திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இதன் அதிகார எல்லைக்குட்பட்ட வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 52 கல்லூரிகளுடன் 2002இல் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களால் துவங்கப்பட்டது. தற்போது 10 அரசு கலைக்கல்லூரிகள், 9 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 6 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 84 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உட்பட 112 கல்லூரிகள் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. மேலும், 3 மொழிப் பண்பாட்டுக் கல்லூரிகள், ஒரு முதுகலை மேலாண்மையியல் நிறுவனமும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

### 4.12.2 சாதனைகள்

- விலங்கியல் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை (DST) அறிவியல்

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி உதவியுடன் (FIST) முதுகலை மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி உபகரணங்கள் **5** ஆண்டுகளுக்கு பெறுவதற்காக ரூ.**34.00** இலட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

- தமிழ்த்துறை, சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிய ரூ.**1.50** இலட்சம் நிதி உதவியுடன் ‘‘செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் கற்றலும் கற்பித்தல் நெறிமுறைகளும்’’ என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.
- ஆங்கிலத்துறை, ‘‘இந்திய இலக்கியத்தில் தலித் இலக்கியங்கள் குறித்த கலந்தாய்வு’’ என்னும் தலைப்பில் தேசிய அளவில் அக்டோபர் **2014**ல் கருத்தரங்கம் நடத்தியுள்ளது. இக்கருத்தரங்கிற்கு, புதுதில்லி, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி மையம் நிதியுதவி அளித்துள்ளது.

### 4.12.3 2014–15ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- உடற்கல்வித்துறை தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மகளிர் கால்பந்தாட்டப் போட்டியினை **3.1.2015** முதல் **6.1.2015** ஆம் தேதி வரை நெய்வேலியில் நடத்தியது. அதில் திருவள்ளுவர் பல்கலைக்கழக மகளிர் கால்பந்தாட்ட அணி முதலிடம் பெற்றது.
- வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பிப்ரவரி **26** முதல் மார்ச் **3, 2015** வரை நடத்தப்பட்ட அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையிலான மகளிர் கால்பந்தாட்டப் போட்டியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக மகளிர் கால்பந்தாட்ட அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலிடம் பெற்றது.
- பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்து உடற்கல்வித்துறை **400** மீட்டர் தடகள

போட்டிக்கான ஓடுதளமும், கூடைப்பந்து சிமெண்ட் தளமும் அமைப்பதற்காக ரூ.12 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

- திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளான கள்ளக்குறிச்சி மற்றும் திட்டக்குடி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மேம்பாட்டிற்காக முறையே ரூ. 383 இலட்சம், ரூ.250 இலட்சம் முதன்மைத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.
- திருவள்ளுவர் பல்கலைக்கழகக் கல்வி வளாகத்தில் காணொளிக் காட்சியுடன் கூடிய செயல்திறன்மிக்க வகுப்பறைகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

**4.12.4 2015–2016ல் மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள்**

- தமிழ்த்துறை, திருக்குறள் அகராதித் தொகுப்பு பணியை பல்கலைக்கழக மானியக்குழுவின் சிறப்பு நிதிஉதவி

திட்டத்தின் (SAP) கீழ் பெற கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது.

- உடற்பயிற்சி கல்வித் துறை துவங்குவதற்கான கருத்துரு பல்கலைக்கழக மானியக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4.13 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**4.13.1.** தெற்காசியாவில் மிகப்பெரிய உறைவிடப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துவங்கப்பட்ட 1929ஆம் ஆண்டிலிருந்து இந்தியா மற்றும் அயல்நாட்டினை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் கல்வியளித்து வருகிறது. மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன்அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் 1929 மாற்றியமைக்கப்பட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் 2013 (தமிழ்நாடு சட்டம் 20/2013) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதன் முக்கிய வளர்ச்சிகளுள் ஒன்றாகும். இப்பல்கலைக்கழகத்தின் நேரடிநிர்வாகமானது தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் 2013 நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர்

இப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் முழுமை பெறுகின்ற வகையில் முறையாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டத்தில் கிராமியச் சூழலில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த இளைஞர்களுக்கு உயர் கல்வியை வழங்குவதில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இந்த வகையில் நம் நாட்டுக்கான இந்தப் பல்கலைக்கழகத்தின் சேவை அளவிட முடியாதது.

கடந்த **86** ஆண்டுகளில், இந்தப் பல்கலைக்கழகம் உயர்கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றில் முதன்மையான நிறுவனமாக வளர்ந்துள்ளது. இன்று இந்தப் பல்கலைக்கழகம் **800** ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பரந்து விரிந்த வளாகத்தில் இயங்கி வருகிறது. இது **49** துறைகள்அடங்கிய **10** புலங்களைக் கொண்டுள்ளது.

2014ம் ஆண்டு தேசிய மதிப்பீடு மற்றும் தர அங்கீகாரக் கழகம் (NAAC) இப்பல்கலைக்கழகத்திற்கு 'A Grade' தரச் சான்று வழங்கியுள்ளது.

இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, இராஜா முத்தையா பல்மருத்துவக் கல்லூரி, இராணி மெய்யம்மை செவிலியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ள இராஜா முத்தையா மருத்துவச் சேவை அறிவியல் நிறுவனம், 1260 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனை மூலம் கிராமப்புற மக்களுக்கு சேவை செய்வதோடு, பல்வேறு இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளை வழங்கி வருகிறது.

வளாகத்திலேயே பயிலும் பல்வேறு படிப்புகளை மேற்கொள்கிற 30,459 மாணவர்களை (மாணவர்கள்:19,825, மாணவியர்கள்:10,634) இந்தப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது. தன்னகத்தே குடியிருப்புகளைக் கொண்டுள்ளதால், அவர்களுள்

10,000க்கும் மேற்பட்டோர், நாட்டிலேயே மிகப்பெரியது என்று பாராட்டப்படக்கூடிய 19 விடுதிகளில் தங்கியுள்ளனர். மேலும், 23 வெளிநாடுகளைச் சேர்ந்த 530 மாணவர்கள் பயின்றுவருகின்றனர்.

1979ல் நிறுவப்பட்ட தொலைதூரக் கல்வி இயக்ககம் பல்வேறு படிப்புகளை வழங்குகிறது. 2014–2015ம் ஆண்டு தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் பயின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2,84,061 ஆகும்.

**4.13.2. சாதனைகள்**

அண்ணாமலைப் பல்கலைக்கழகமானது தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகளின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச நிதி நல்கைக் குழுக்களிடமிருந்து ரூ.110 கோடியை கடந்த நான்கு ஆண்டுகளில் பெற்றுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியீடுகளின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்ததன் காரணமாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் PURSE விருதினை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இதன் மதிப்பு ரூ.15 கோடி ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் 847 ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடப்பட்டன. ஒரு காப்புரிமை பெறப்பட்டுள்ளது. 6 காப்புரிமைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. 251 திட்டங்கள் பெறப்பட்டுள்ளன. 28 மாணவர்கள் SLET, UGC-CSIR-NET, GATE, ICAR-NET தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் 102 ஊக்கத் தொகைகள் பெறப்பட்டுள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 19 துறைகள் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்பு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. 17 துறைகள் அறிவியல் தொழில்நுட்பத்துறையின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.44 கோடிக்கான 298 ஆய்வு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. மேலும் தற்போது ரூ.128 கோடி மதிப்பிலான 474 ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Scopus தரவரிசையின்படி நிலையில், இப்பல்கலைக்கழகம் இந்திய பல்கலைக்கழகங்களில் 7வது இடத்தைப் பெற்றுள்ளது. ஒபாமா–சிங் 21ம் நூற்றாண்டு அறிவு ஊக்குவிக்கும் முயற்சியின் கீழ் அமெரிக்காவின் டென்னசி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், INDO-EU FUNCFOOD திட்டத்தின் ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் செயல்பட்டு வருகின்றது. மேலும் 15 காப்புறுதி உரிமங்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. 33க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தேசிய மற்றும் சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் மேற்கொண்டுள்ளது.

**4.13.3 2014–15ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்/செயல்பாடுகள்**

பல்வேறு தேசிய சர்வதேச மாநாடுகள், பயிற்சி வகுப்புகள், ஆய்வுகள் கருத்துப்பட்டறைகள் போன்ற நடவடிக்கைகள் வெவ்வேறு நிதி நல்கை குழுக்களிடமிருந்து ரூ.12.40 கோடி நிதியுதவி பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

**4.13.4 2015–16ம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உள்ள திட்டங்கள்**

**i. பெண்களுக்கான படிப்பு மையம்**

பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி உதவியுடன் 2015–16ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மகளிர் கல்விமையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ii. உடற்கல்வி சீர்மிகு திறன் வாய்ந்த மையம்**

பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி உதவியுடன் 2015–16ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

சிறப்புப் பயிற்சி மற்றும் தடகளப் பயிற்சி அளிப்பதற்காக உடற்கல்வி மையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

iii. **தற்போதைய விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாடு**

பல்கலைக்கழக மானியக்குழு ரூ.2.40 கோடியினை விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒப்பளித்துள்ளது.

iv. **இங்கிலாந்து மற்றும் இந்திய பிற பல்கலைக்கழகங்களுடன் ஆராய்ச்சி துவக்க உலகளாவிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

மருந்து செலுத்துவதற்கானஅளவை நிர்ணயம் செய்வதற்கும் அதனால் திசுக்களில் ஏற்படும் மாறுபாடுகளையும் ஆய்வு செய்வதற்காக திசுக்களில் தோன்றும் புற்றுநோய் மாதிரியை தயார் செய்வது குறித்த (DST-UKIERI) கூட்டுத்திட்டம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் எடின்பார்க்

உறிராய்டவாக் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் செயல்படுத்தப்பட உள்ளது.

v. **சீர்மிகு திறன் வாய்ந்த பல்கலைக்கழகம்**

தற்போது இப்பல்கலைக்கழகம் சீர்மிகு திறன் வாய்ந்த பல்கலைக்கழகம் என்ற நிலையினை அடைவதற்கு முனைப்பு கொண்டுள்ளது.

vi. **குறிப்பிட்ட துறையில் சீர்மிகு திறன் வாய்ந்த மையம்**

மூன்று துறைகள் (இயந்திரவியல்–உற்பத்தி, உயிரிவேதியியல் மற்றும் உயிரிதொழில்நுட்பம்) குறிப்பிட்ட துறையில் சீர்மிகு திறன் வாய்ந்த மையம் என்ற தகுதியை பெறுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

## 5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

**5.1** தமிழ்நாடு ஆவணக்காப்பகம், அரசின் மூல ஆவணங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாவணக்காப்பகம் 100 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்ததாகும்.

**5.2** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் பல்வேறு தலைமைச் செயலக துறைகளின் ஆவணங்கள், முந்தைய வருவாய் வாரிய ஆவணங்கள், சில துறைத் தலைமையிட ஆவணங்கள், கி.பி.1857—க்கு முந்தைய மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள், நீதிமன்ற ஆவணங்கள் போன்ற முக்கிய ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இக்காப்பகத்தில் டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீக மொழிகளில் உள்ள மாவட்ட நீதிமன்ற ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**5.3** உலகெங்கிலும் உள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளிலிருந்து எழுத்தாளர்கள்,

வரலாற்று அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் இக்காப்பகத்திற்கு ஆய்வுப் பணிகளுக்காக வருகை புரிகின்றனர். தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் பல அரிய நூல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வகையில் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூலகம் அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட விவரச் சுவடிகள் இக்காப்பகத்தால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

**5.4** இக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களை பாதுகாக்க கணினிமயமாக்கும் மற்றும் நுண்படம் எடுக்கும் பணிகள் பகுதி, பகுதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2014–15** ஆம் ஆண்டில் பகுதி–**2** திட்ட பணிகளின் கீழ் **1900** ஆம் ஆண்டுக்கு முந்தைய செப்பனிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் **1900** ஆம் ஆண்டுக்கு பிந்தைய ஆவணங்களை கணினிமயமாக்க மற்றும் நுண்புகைப்படம் எடுக்க ரூ.**10.00** இலட்சம் அரசால்

ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**5.5** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் கணினி மயமாக்கப்பட்ட ஆவணங்களை அரசு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யவும் ஒருங்கிணைந்த கணினி மயமாக்கும் பணிக்காகவும் மாநில புத்தாக்க நிதியின் (State Innovation Fund) கீழ், ரூ.**67.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**6.1** மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களின் மேம்பாட்டிற்கும், மத்திய, மாநிலத் திட்டங்கள், பல்கலைக்கழக மான்யக் குழுவின் திட்டங்கள் இவற்றை ஒருங்கிணைக்க உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையின் சட்டமொன்றின் வாயிலாகத் தோற்றுவிக்கப்பெற்றது. இந்தியாவின் பழமையான உயர்கல்வி மன்றங்களில் இதுவும் ஒன்று.

### 6.2 சாதனைகள்

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 25 முதுகலை மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்கள் ஒவ்வொரு வருடமும் அயல்நாடு சென்று ஒரு பருவம் பயிலும் "வெளிநாடு சென்று கல்வி கற்கும் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

- ஆறு பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ள ‘பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களின் இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படுகிறது.
- ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 18 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் ‘மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு, மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தும்’ திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
- கற்பித்தல், ஆராய்ச்சி, உள்பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் விரிவாக்க சேவைகளை பெற ஏதுவாக தமிழகத்திலுள்ள கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களை சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்த

‘பன்னாட்டுத் தொடர்பு மையம்’ ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாணவர்களின் மென் திறனை மேம்படுத்தும் நோக்கில் 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ‘மென் திறன் மையங்கள்’ உருவாக்கப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடங்களையும் 8 பிரிவுகளாக வகைப்படுத்தி பாடப்பிரிவுகளை தொகுத்தும், பாடங்களுக்கான சமநிலையினை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியும் ‘மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்டக்குழு’ செயல்பட்டு வருகிறது.
- பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் / அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு ‘சிறு ஆராய்ச்சி’ திட்டம் மற்றும் அரசு கலைக் கல்லூரி மாணவர்களுக்கென ‘மாணவர் சிறு ஆய்வு’ திட்டம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.

- இம்மன்றம் ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக ‘மானுடவியல் மற்றும் சமூக அறிவியல்’, ‘நவீன அறிவியல்’ ஆகிய தலைப்புகளில் ஆண்டிற்கு இருமுறை ஆராய்ச்சி இதழ்களை வெளியிடுகிறது.
- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும், அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு நிர்வாகம் குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டது.

### 6.3 2014–2015ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

- அயல்நாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஒரு பருவத்தினை பயிலும் திட்டமானது, 2ம் ஆண்டாக 2014–15 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலிருந்து 25 முதுகலை மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்கள் தெரிவு

செய்யப்பட்டு 2014 செப்டம்பர் முதல் ஜனவரி 2015 வரை இங்கிலாந்து நாட்டில் ஒரு வருடம் பயில அனுப்பப்பட்டனர். இத்திட்டத்திற்காக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.15 இலட்சம் அரசு செலவிடுகிறது.

- சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய 6 பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்கள், மாணவர்கள் தொழில் துறையைச் சார்ந்த ஆராய்ச்சித் திட்டங்கள், தொழில் துறையைச் சார்ந்த படிப்புகள், உள்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற வழிவகை

செய்கின்றது. இத்திட்டத்திற்காக ரூ.4.50 இலட்சம் செலவிடப்படுகிறது.

- கல்லூரிகளில் மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தும் திட்டம் 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 18 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மாணவர்கள், இடைநிற்றலை தவிர்ப்பதில் கவனம் செலுத்துவதுடன் தங்களின் பட்டப்படிப்பினை முடிக்கவும், அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளித்து அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் செலவிடப்படுகிறது.
- பன்னாட்டுத் தொடர்பு மையத்தின் முகமையாக செயல்படும் இம்மன்றம் சர்வதேச

அளவில் ஏற்படுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைகளின் தொகுப்புகள், அவற்றில் உள்ள பரிமாற்றங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றினைச் சேகரித்து வருகிறது. சர்வதேச அளவில் வழங்கப்படும் கல்விப் பயிற்சி, திறன் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆகிய தகவல்களைச் சேகரித்து 13 மாநில பல்கலைக்கழகங்களும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு கல்லூரிகளிலும் 15 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து, மென்திறன்களை மாணவர்களுக்குக் கற்பிக்க மென்திறன் மையங்களை 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இம்மன்றம் ஆரம்பித்துள்ளது. இம்மன்றம் ‘இன்டெல்’ நிறுவனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு கணினிக் கல்வி, தகவல் தொடர்பு திறன்,

ஆளுமை வளர்ச்சி, நேர்காணல் திறன் ஆகிய மென்திறன்களை ஒருங்கிணைத்து அளிக்க வழிவகை செய்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பினை நிறைவு செய்யும் பொழுது வேலைவாய்ப்புகளைப் பெறத் தேவையான தகுதியினை அடைகின்றனர். இத்திட்டத்திற்காக தொடக்கத்தில் ஒவ்வொரு கல்லூரிக்கும் தொடராச் செலவினமாக (Non-recurring) ரூ.2 இலட்சமும், தொடரும் செலவினமாக (Recurring) ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.2.50 இலட்சமும் செலவிடப்படுகிறது.

- மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்டக்குழு கீழ்க்கண்ட புலன்களில் பல பல்கலைக்கழக வல்லுநர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

- உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப அறிவியல்
- கணித அறிவியல்
- இயற் அறிவியல் மற்றும் வேதி அறிவியல்
- கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்
- மேலாண்மை மற்றும் வணிகவியல்
- சமூக அறிவியல் மற்றும் மானுடவியல்
- மொழிகள்
- கல்வியியல்

மேற்காணும் தலைப்புகளில் பல்வேறு பாடங்களுக்கான கூட்டங்களை நடத்தி கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடிய மற்றும் செயல்படுத்த வேண்டிய பாடத்திட்டங்கள் குறித்து வரையறை செய்யவும், பாடங்களுக்கான சமநிலை வழங்குவதில் முக்கிய பங்காற்றவும் இக்குழு செயல்படுகிறது. இதன் மூலம் பலர் வேலைவாய்ப்பு பெற இம்மன்றம் உதவி வருகிறது.

பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் / அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு 'சிறு ஆராய்ச்சி ஆய்வு' திட்டம் மூலம் நிதியுதவியாக ரூபாய் ஒரு இலட்சமும், அரசு கலைக்கல்லூரி முதுகலை மாணவர்களுக்கென 'மாணவர் சிறு திட்டம்' மூலம் நிதியுதவியாக ரூ.15,000/–மும், 100 திட்டங்கள் வரை தெரிவு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**6.4 2015–2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள செயல்பாடுகள்**

- உயர்கல்வித் துறையின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான "அயல் நாட்டில் கல்வி கற்கும் திட்டம்" இவ்வாண்டும் செயல்படுத்தப் படுகிறது.
- திறன்களை வளர்க்கவும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும்

பிறமாநிலங்களின் ஆசிரியர்கள் பரிமாற்றம் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

- பயிலரங்குகள் நடத்துவதன் மூலம் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சி எண்ணங்களை மேம்படுத்துதல்.
- இம்மன்றம் “தொலை நோக்கு திட்டம் **2023**” மூலம், அடிப்படை அறிவியல், நானோ தொழில்நுட்பம் மற்றும் கட்டிட மேலாண்மை ஆகியவற்றிற்கு மைய அமைப்பாக இருந்து ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்ளவுள்ளது.
- தமிழகத்தில் இளங்கலைப் பட்ட மாணவர்களின் தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தும் விதமாக “மாநில புதுமை நிதி” (TANII) திட்டத்தில் முக்கிய

பாடத்திட்டத்துடன் இணைந்த மொழி கற்றல் முறையின் வாயிலாக கருத்து பரிமாற்றத் திறனை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துதல். இதற்காக ரூ.**62.40** இலட்சம் மூன்றாண்டுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 7. தேசிய உயர்கல்வித் திட்டம் (RUSA)

**7.1** மைய அரசின் திட்டக்குழுவால் பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள முக்கியமான தேசிய உயர்கல்வித் திட்டம் RUSA (Rashtriya Uchchatar Shiksha Abhiyan) ஆகும்.

**7.2** தொடக்க தொகையாக பெறப்பட்ட ரூ.5 கோடி, மாநில உயர்கல்வித் திட்டத்தை உருவாக்கவும், திட்ட இயக்ககம் மற்றும் தொழில்நுட்ப உதவிக்குழு ஆகியவற்றை நிறுவுவதற்கும் திறம்பட பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநில உயர்கல்வித் துறையால், ரூசா திட்டத்தின் பல்வேறு கூறுகளின் கீழ் உருவாக்கப்பட்ட மாநில திட்டமானது பல்வேறு சமூக குழுக்களுக்கிடையே உயர்கல்வியை பெறுவதிலுள்ள சமச்சீரற்ற நிலையினை நீக்குவதற்கும், கற்பித்தல்– கற்றல் செயல்பாடுகளின் தரத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை போட்டி முறையில் பெறத்தக்க வகையில் பட்டதாரிகளை உருவாக்கவும், ஆராய்ச்சி

மற்றும் துறை மேம்பாட்டு நடவடிக்கைகளை உயர்த்தவும் மற்றும் அறிவின் எல்லையை விரிவாக்கம் செய்வதற்கான கல்வி நிறுவனங்களுக்கு புத்துயிர்வூட்டும் விதமாக கல்வி மற்றும் உள்கட்டமைப்பினை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

**7.3** ஏற்கனவே புள்ளி விவரப் பட்டியல்படி அனைத்து நிலைகளிலும் உயர்ந்து நிற்கும் நம் மாநிலத்தின் உயர்கல்வியை அடியொற்றி உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் பெறும் நிதியுதவியானது ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் உலகளாவிய அறைகூவல்களை எதிர்கொள்ளும் திறன் படைத்த மாணவ சமுதாயத்தினை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும்.

**7.4** உயர்கல்வித்துறை, இத்திட்டத்தில் பங்குபெறுவதற்கான தகுதி பெறும் நிபந்தனைகளை நிறைவேற்றும் முகமாக, உயர்கல்வியில் அனைத்து

சமுதாயப் பிரிவினரும் பங்குபெறும் வகையில் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்து, தரமான முன்னேற்றம், திறன்மேம்பாட்டுத் திட்டங்கள், ஆசிரியர் திறன்மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை வகுத்து திறம்பட செயல்பட்டு வருகிறது. அரசு கல்வி நிறுவனங்களில் அதிகப்படியான மகளிர் விடுதிகளை உருவாக்குதல், பயன்பாட்டிலுள்ள கட்டிடங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வகையில் மாற்றியமைத்தல், மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள், அரசு தொழில்நுட்ப கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்துதல் மூலம் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி தமிழ் நாட்டினை உயர்கல்விக்கான மையமாக மாற்றி, உயர்கல்வியில் ஒரு முழுமையான வளர்ச்சி ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

# 8. அறிவியல் நகரம்

**8.1** உயர்கல்வித் துறையின் அறிவியல் நகரம் மக்கள் மத்தியில் அறிவியலை உணர்வூட்டி பிரபலபடுத்துவதற்காக **1998**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அறிவியல் நகரம், புவியியல் பகுதி என்று குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில் அமைந்துள்ள **60** க்கும் மேற்பட்ட தலைசிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடங்களில், உயர்ரக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மனித வலிமை படைத்த ஒரு அமைப்பாக கருதலாம்.

அறிவியல் நகரத்தினால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளினால் தேவையான அறிவியல் விழிப்புணர்வை கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே அறிவியல் நகரம் ஏற்படுத்தியுள்ளது.

## 8.2 2012 – 2013ஆம் ஆண்டில் செயல்பாடுகள் / திட்டங்கள்

- மீநுண் அறிவியல் வெளிப்பாடு (Nano Revelation) என்ற நிகழ்ச்சி தொடர்

கருத்தரங்கு உள்ளமைந்ததாகும். சென்னை பல்கலைக்கழகத்தின் தேசிய நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கு கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இதனால் மாணவ மாணவியர்கள் மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பற்றியும், உலக அரங்கில் மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் எந்த அளவு முன்னேறியுள்ளது என்றும் அறிந்தனர்.

- அறிவியல் நகரம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்காக, சென்னை பல்கலைக்கழகம் மற்றும் இராமச்சந்திரா பல்கலைக்கழகத்துடன் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாதுகாப்பான ஆய்வக நடைமுறைகள் குறித்த கருத்தரங்கை நடத்தியது.

- அறிவியல் நகரம், 2008 ஆம் ஆண்டு முதல் சென்னை அறிவியல் விழாவினை வெற்றிகரமாக நடத்திவருகிறது. அறிவியல் விழா பல வகையான அறிவியல் நிகழ்வினை உள்ளடக்கியதாகும். ஆறாவது அறிவியல் விழா 30.01.2013 முதல் 03.02.2013 வரைஅண்ணா ஜெம் அறிவியல் பூங்கா பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டது.

**8.3 2013 – 2014 ஆம் ஆண்டில் செயல்பாடுகள் / திட்டங்கள்**

- அறிவியல் நகரமும் கிங் தடுப்பு மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் (King Institute of Preventive Medicine and Research) இணைந்து 6 தொடர் செய்முறை பயிற்சி பட்டறையை 6 பாகங்களாக பிரித்து நடத்தியது. இப்பட்டறையில் நுண்ணோக்கி மற்றும் நுண்ணுயிர் நிறமேற்றுதல் நடைமுறைகள் (Microscopy and

Microbial Staining Procedures), மீடியா தயாரிப்பு சுத்திகரிப்பு (sterilization) முறைகள், மருத்துவ நுண்ணுயிரியல் (Medical Microbiology), சீராலாஜிக்கல் நுட்பங்கள், மூலக்கூறு உத்திகள் மற்றும் உயிர் தகவலியல் (Bioinformatics) போன்ற துறைகள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டது.

- அறிவியல் நகரத்தின் மேற்கூரையில் 10 kw grid வகை சூரிய ஒளி மின்சார அமைப்பு நிறுவப்பட்டு அதிலிருந்து தினசரி 40 kw மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- அறிவியல் நகரம் ஏழாவது சென்னை அறிவியல் விழாவை **29.01.2014** முதல் **01.02.2014** வரை அண்ணா ஜெம் அறிவியல் பூங்கா பள்ளி வளாகத்தில் நடத்தியது. இவ்விழாவில் **110** மாநில மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள்

பங்கேற்றனர். பொதுமக்கள்அல்லாது 84 பள்ளிகள் மற்றும் 14 கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் வருகை தந்து பயன் அடைந்தனர்.

- சென்னை அறிவியல் விழாவின் துவக்க விழாவில் தமிழ்நாடு இளம் பெண் விஞ்ஞானிகள் விருதினை அறிவியல் நகரம் 10 பெண் விஞ்ஞானிகளுக்கு வழங்கி கௌரவித்தது.
- பள்ளி மாணவர்களை கௌரவிக்கும் வண்ணம் 69 இளம் பள்ளி மாணவர்களுக்கு இளம் அறிவியலாளர் விருது வழங்கப்பட்டது.

**8.4 2014 - 2015 ஆம் ஆண்டில் செயல்பாடுகள் / திட்டங்கள்**

- அறிவியல் நகரம் செம்மறி ஆடு, வாத்து மற்றும் பன்றி வளர்ப்பு பற்றிய 3 நாள் பயிற்சி பட்டறை நடத்தியது.

- தமிழகம் முழுவதும் இருந்து **30** மாணவர்கள் பொது அறிவியல் குறித்த கோடைக்கால பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.
- அறிவியல் நகரம் தேசிய மீநுண் அறிவியல் மற்றும் மீநுண் தொழில்நுட்ப மையத்துடன் இணைந்து **3** நாள் மீநுண் அறிவியல் மற்றும் மீநுண் தொழில்நுட்பத்தின் அடிப்படை மற்றும் பயன்பாடுகள் என்ற தலைப்பில் கல்லூரி மாணவ மாணவியர்களுக்காக கருத்தரங்கை நடத்தியது.
- பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களுக்காக இளைஞர் சுகாதார மன்றம் ஏற்படுத்துதல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.
- அறிவியல் நகரம் செவித்திறன், பேச்சுத்திறன் மற்றும் பார்வைத் திறன் குறைந்த மாற்றுத் திறனாளிகளுக்காக அறிவியல் சார்ந்த நிகழ்ச்சியை நடத்தியது.

- அறிவியல் நகரம் எட்டாவது சென்னை அறிவியல் விழாவினை பிப்ரவரி **2015** கடைசி வாரத்தில் இராணி மேரி கல்லூரி வளாகத்தில் நடத்தி முடித்துள்ளது.

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

**9.1** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் **1983**—ல் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களது தலைமையின்கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற மையமாக நிறுவப்பட்டது. அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை பொதுமக்களிடையே குறிப்பாக மாணவ மாணவியர்களிடையே பரவலாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். பொது மக்களின் அனைத்து வயதினருக்கும் அறிவியல் கற்றல் என்பதை மகிழ்வளிப்பதாகவும், உற்சாகமளிக்கும் அனுபவமாகவும் இருக்கும் வகையில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் செயல்பட்டு வருகிறது. சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் பி.எம். பிர்லா கோளரங்கம், பெரியார் காட்சிக்கூடம், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், நகர்ப்புற வளர்ச்சி, உயிர் அறிவியல், கடல்சார் காட்சிக்கூடம், மின்னணு மற்றும்

தகவல் தொழில்நுட்பம், வேடிக்கைக் கண்ணாடிகள், டாக்டர் சாலமன் விக்டரின் – இதயங்களின் காட்சிக்கூடம், முப்பரிமாணத் அறிவியல் திரையரங்கம், அறிவியல் பூங்காக்கள், பரிணாம வளர்ச்சிப் பூங்கா, மாநில அளவிலான ஆற்றல் பூங்கா ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இவை வானவியல், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் பல்வேறு செய்திகளை உள்ளடக்கியவையாக சுமார் **10,000** சதுர மீட்டர் உள்ளரங்கம் மற்றும் வெளிப்புறப் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன.

**பாதுகாப்பு ஆராய்ச்சி காட்சிக்கூடம், ராமானுஜன்– கணிதக் காட்சிக்கூடம், இந்திய விண்வெளி ஆய்வுக் காட்சிக்கூடம், அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம்** ஆகியன அந்தந்தத்துறைகள் பற்றிய சிறப்பான செய்திகளை உள்ளடக்கியவையாக அமைக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. மேலும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப

மையமானது திருச்சியில் கோளரங்கத்துடன் கூடிய அண்ணா அறிவியல் மையம், கோவையில் மண்டல அறிவியல் மையம் மற்றும் வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் ஆகியவற்றினை நிறுவியுள்ளது.

## 9.2 செயல்பாடுகள்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறுபட்ட வகைகளில் அறிவியல் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி அறிவியல் கல்வி கற்பதை எளிதாக்குகிறது. அறிவியல் திறன் போட்டிகள், பயிலரங்குகள், சொற்பொழிவுகள், மாநில அளவிலான திறனறி மற்றும் ஊக்கமளித்தல் போட்டிகள், அறிவியல் மையத்தில் ஒரு நாள் நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர், ஆசிரியர் மற்றும் பொதுமக்களுக்கான பிற அறிவியல் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

தற்காலிகக் கண்காட்சிகள் நடத்துதல், பயிலரங்குகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், குறுகிய கால அறிவியல் வகுப்புகள், வானவியல்

முகாம்கள், வினாடி வினா போட்டிகள் ஆகியன தொடர்ந்து நடத்தப்பட்டு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையச் செய்வது தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபை அந்தந்த ஆண்டிற்கான அறிவியல் தலைப்பை அறிவியல் பரப்புரை நிகழ்வுகளுக்காக வெளியிடுகிறது. அத்தகைய தலைப்பின் கீழ் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவ மாணவியர்களின் நலனிற்காக நடத்துகிறது.

அரிய வானவியல் நிகழ்வுகளின்போதும் தொடர் நிகழ்வாகவும் வான் ஆய்வு நிகழ்ச்சிகளை சிறந்த தொலை நோக்கிகளின் உதவியுடன் இம்மையம் நடத்துகிறது. இந்நிகழ்ச்சிகள் மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது,

நடமாடும் அறிவியல் கண்காட்சி நடமாடும் கணிதக் கண்காட்சி ஆகியன தமிழகத்தின் அனைத்து உட்புறப் பகுதிகளுக்கும் சென்றடையும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன.

- "பொருட்கள் எவ்வாறு இயங்குகின்றன" (How things work Gallery), "ஆடைகள் உற்பத்தி குறித்த காட்சிக்கூடம்" (Textile Gallery). "இயல் அறிவியல் காட்சிக்கூடம்" (Physical Sciences Gallery) வேடிக்கை அறிவியல் காட்சிக்கூடம் (Fun Science Gallery), ஆகிய நான்கு காட்சிக்கூடங்கள், முப்பரிமாணத் திரையரங்கு (3D Theatre) மற்றும் அறிவியல் பூங்கா (Science Park) ஆகிய வசதிகளுடன் கோயம்புத்தூரில் ரூ.850 இலட்சம் (ரூபாய் எண்ணூற்று ஐம்பது

இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மண்டல அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- நாட்டின் பாதுகாப்புப் படைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சி விவரங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு ரூ.100 இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மைய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (Defence Research and Development Organisation) மூலமாக ‘‘பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு‘‘ காட்சிக்கூடம் சென்னையிலுள்ள, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் பொதுமக்களின் பார்வைக்கு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

- மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதப் பாடத்தின் மீது நிலவுகின்ற அச்சத்தினை நீக்கும்பொருட்டு, π (Pie) அரங்கம், வேடிக்கை வழி கணிதம் கற்றல், அன்றாட வாழ்வில் கணிதத்தின் பயன்பாடு, தொழிற்சாலைகளில் கணிதம் போன்ற விவரங்கள் அடங்கிய இராமாநுஜன் கணிதக் காட்சிக்கூடம் ரூ.40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக்கூடம் பொது மக்களின் பார்வைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளது.
- ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதத்தின் மீதுள்ள அச்சத்தினைப் போக்கும் வகையில், ரூ.25 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஒரு நடமாடும் கணிதப்

பேருந்து, நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த கணிதப் பேருந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் அர்ப்பணிக்க தயார் நிலையிலுள்ளது.

- மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான தேவைகளைப் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, ரூ.140 இலட்சம் (ரூபாய் நூற்று நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் மாநில அளவிலான ஆற்றல் பூங்கா சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில், அமைக்கப்பட்டுள்ளது.
- அணு ஆற்றல் மீதான தவறான எண்ணங்களை நீக்கி மற்றும் ஆதாரமற்ற அச்சத்தைப் போக்கும் பொருட்டு, அணு ஆற்றலை சமுதாயத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படும்

வழிமுறைகள் அடங்கிய அணு ஆற்றல் காட்சிக்கூடம் (Hall of Nuclear Power) ஒன்று, மத்திய அரசின் அணு ஆற்றல் கழகத்தின் (Nuclear Power Corporation of India Limited) நிதி உதவியுடன் ரூ.240 இலட்சம் (ரூபாய் இருநூற்று நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தக் காட்சிக்கூடம் 2015 – 2016 ஆம் நிதியாண்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படும்.

- பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஏவூர்திகள் (Rocket) செலுத்துதல் ஆகியவற்றில் நிகழ்ந்து வரும் மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் வானவியலில் உள்ள கோள்கள் மற்றும்

விண்மீன்கள் பற்றிய தகவல்களை அளித்தல் ஆகியவற்றிற்காக, இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Indian Space Research Organisation) நிதி உதவியுடன் "விண்வெளி அறிவியல் காட்சிக்கூடம்" (Space Science Gallery) ஒன்று, ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில், சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சிக்கூடம் திறக்கப்பட தயார் நிலையில் உள்ளது.

## 9.3 செயல்பாடுகள் 2015 – 2016

### 9.3.1 பரிணாம வளர்ச்சிப் பூங்கா – அண்ணா அறிவியல் மையம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது பரிணாம வளர்ச்சிப் பூங்கா ஒன்றினை சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மைய

வளாகத்தில் அமைத்துள்ளது. பரிணாம வளர்ச்சியினை பற்றி தெரிந்து கொள்வதற்காக அதிக பார்வையாளர்களை இப்பூங்கா கவர்ந்து வருகிறது. இதைப்போன்றே, திருச்சி, அண்ணா அறிவியல் மையத்தில் நவீன பரிமாண வளர்ச்சிப் பூங்கா நிறுவப்படவுள்ளது. இப்பூங்கா ஓர் செல் உயிரினத்திலிருந்து மனிதனின் பரிணாம வளர்ச்சி வரையிலான பல படிகளின் மாதிரிகள் உள்ளடக்கியதாக இருக்கும். இவற்றில் சில டைனோசர் மாதிரிகள் தலையை அசைக்கும் தன்மையுடையவைகளாக வடிவமைக்கப்பட்டு ஓசையும் எழுப்பி பார்வையாளர்களை கவருவதாக இருக்கும். இப்பூங்காவில் முதுகெலும்பில்லாத மற்றும் முதுகெலும்புள்ள, நில நீர் வாழ்வன, ஊர்வன, பறவைத் தோற்றம், பாலூட்டிகள், மனிதக் குரங்கு மற்றும் மனிதர்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய காட்சிப் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. இளம் மாணவச்

செல்வங்களின் மனதில் எதிர்காலத்தில் பரிணாம வளர்ச்சியின் ஆர்வத்தினை தூண்டும் வகையில், திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையம் – கோளரங்கத்தில் ரூ.70 இலட்சம் (ரூபாய் எழுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பரிணாம வளர்ச்சிப் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பூங்கா 2015 – 2016 ஆம் நிதியாண்டில் பொது மக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்படும்.

### 9.3.2. குறுங்கோளரங்கங்கள் நிறுவுதல்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் அமையப் பெற்றுள்ள கோளரங்கங்களின் மூலமாக வானவியல் கருத்துக்களை பரப்பி வருகின்றது. கோளரங்க நிகழ்ச்சிகள் மூலமாக, இரவு நேரத்தில் வானத்தில் காணப்படும் கோள்கள், வானவியல் நிகழ்வுகள், திசைகளை அறிதல், நட்சத்திர மண்டலத்தினை கண்டு அறிதல், பருவகாலங்கள்,

சூரியன் மற்றும் கோள்களின் நகர்வுப் பாதை ஆகியவை விரிவாக விளக்கிக் காட்டப்படுகிறது. இவ்வாறு விரிவடைந்து வரும் வானவியல் கருத்துக்களை விளக்கும் வகையில், நிலையாக நிறுவப்பட்டுள்ள பெரிய அளவிலான கோளரங்கங்கள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளதால், ஊரகப்பகுதியில் உள்ள மாணவர்கள் இந்நிகழ்ச்சியினை நகரங்களில் வந்து கண்டுகளிப்பது மிகவும் சிரமமாக உள்ளது. இந்நிகழ்ச்சிகளை குறுங்கோளரங்கம் என்ற எளிதில் கையில் எடுத்துச் செல்ல கூடிய அமைப்பின் மூலமாக கிராமப் பகுதியில் நடத்த முடியும். இதன் பயன்பாட்டினைக் கருதி நான்கு மையங்களான சென்னை, திருச்சி, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் இந்நகர்களைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடையும் வகையில் நான்கு குறுங்கோளரங்கங்கள் ரூ.40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்)

செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த வசதிகள் 2015 –2016 ஆம் நிதியாண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 9.3.3 வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் முப்பரிமாண அறிவியல் திரையரங்கம் அமைத்தல்

அறிவியல் கருத்துக்கள் ஆழ்ந்து உணரும் விதத்தில் விரிந்துரைக்கப்படும்போது அடிப்படை அறிவியல் தத்துவங்களை மிக எளிதாகத் தெரிவிக்க இயலும் . முப்பரிமாணப் படக் காட்சிகள் அறிவியல் கோட்பாட்டினை பிரமிக்கத்தக்க வகையில் விளக்க வல்லவை. மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.15 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் ஒரு முப்பரிமாண அறிவியல் திரையரங்கு மாவட்ட அறிவியல் மையம், வேலூரில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வசதி 2015 – 2016 ஆம் நிதியாண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 9.4.4 சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் வான் ஆய்வுக்கூடம் நிறுவுதல்

வான் ஆய்வுக்கூடம் என்பது மிகச் சிறந்த தொலைநோக்கிகள், பிம்பங்களைப் பெறுவதற்கான கருவிகள், பகுப்பாய்வு செய்யப் பயன்படும் கருவிகள் முதலியவை பொருத்தப்பட்ட ஓரிடமாகும். விண்வெளியில் காணப்படும் வான் பொருட்களை பொதுமக்கள் உற்று நோக்கவும், விண் இயற்பியலில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இக்கூடம் பயன்படும். நகரக்கூடிய குவியமைப்புடைய கூரையினால் வடிவமைக்கப்பட்ட கட்டிடத்தில் இத்தொலைநோக்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். குவிந்த வடிவுடைய இக்கூரை அமைப்பு தேவைப்படும்போது திறந்துகொள்ளவும், தேவைக்கேற்ற கோணத்தில் வானத்தை நோக்கித் திருப்பும் வகையிலும், தொலைநோக்கிகளைக் கொண்டு வானைப் பார்க்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். கோள்கள், சந்திரன், சிறு அண்டங்கள், விண்மீன் குழுக்கள், நெபுலாக்கள்

போன்ற வான்பொருள்களைப் பொதுமக்கள் பாதுகாப்புடன் பார்வையிடுவதற்கேற்ற வகையில் விண்வெளி ஆய்வுக்கூடம் நிறுவுவதற்கேற்ற சிறந்த இடம் கோளரங்கமேயாகும். தற்போது வானியற்பியல் மிக வேகமாக வளர்ந்துவரும் ஒரு துறையாகும். மாணவர்கள், சிறந்த ஆய்வாளராக அல்லது தொழில்நுட்ப நிபுணராகப் பணியாற்றிட எதிர்காலத்தில் அதிக வாய்ப்புகளை உருவாக்கித் தரும் துறை வானவியல் துறையாகும். வான் ஆய்வுக் கூடத்தில் விண்வெளி ஆய்வுக்கூடச் சூழ்நிலையில் பணியாற்றும்போது அது இளம் உள்ளங்களுக்கு உற்சாகத்தைத் தூண்டும். அதுபோலவே விண்வெளி ஆய்வுக்கூடச் சூழலில் விண்ணியல் பொருள்களை பார்வையிட்டு அறிந்து கொள்வது அதிக தகவல்களைப் பெறுவதோடு, மனநிறைவையும் பொதுமக்களுக்கு அளிக்கிறது. இத்தகைய வான் ஆய்வுக்கூடம் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ரூ.40.00 இலட்சம் (ரூபாய்

நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வசதிகள் 2015 -2016 ஆம் நிதியாண்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்படும்.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1** தமிழக அரசால் **1984** ஆம் ஆண்டு ஒரு தன்னாட்சி நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் அமைக்கப்பட்டது. இது பல்வேறு அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தலைமை நிறுவனமாகும். பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை இம்மன்றம் ஊக்குவித்து வருகிறது.

இம்மன்றத்தின் அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களின் பரவலாக்கம் ஒவ்வொரு வருடமும் படிப்படியாக அதிகரித்து, கடந்த **4** ஆண்டுகளில் ஆய்வுகள் மற்றும் விரிவாக்க திட்டங்களின் மூலம் அதிகப்படியான பயனாளிகளை சென்றடைய முடிந்தது. இம்மன்றத்தின் செயல்பாடுகளுக்கென அரசின் நிதியுதவி **2011–2012**ம் ஆண்டில் ரூ.**181.27**

இலட்சங்களும் ; **2012–2013** ம் ஆண்டில் ரூ.**203.77** இலட்சங்களும்; **2013–2014** ம் ஆண்டில் ரூ.**195.06** இலட்சங்களும்; **2014–2015** ம் ஆண்டில் ரூ.**232.56** இலட்சங்களும் மற்றும் **2015–2016**ம் ஆண்டில் ரூ.**200.19** இலட்சங்களும் அளிக்கப்பட்டுள்ளது.

## 10.2. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

நம் மாநில மாணவ மாணவியர்களுக்கிடையே இருக்கும் எண்ணற்ற திறமைகளை அறிவியல் தொழில்நுட்பத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், இளநிலை மற்றம் முதுநிலை பொறியியல், முதுநிலை அறிவியல், மருத்துவயியல், வேளாண்மையியல் மற்றும் கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூக பயன்பாடுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ. **10,000/–** வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் **2014–2015**ம் ஆண்டில் ரூ.**20.00**

இலட்சங்கள் செலவில் **250** மாணவ மாணவியரின் ஆராய்ச்சி திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. **2015–2016**ம் ஆண்டில் ரூ.**20.00** இலட்சங்கள் செலவில் மேலும் **250** மாணவ மாணவியரின் ஆய்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

## 10.3. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

உயிரியல், வேளாண்மை, சுற்றுப்புறச் சூழல், மருத்துவவியல், சமூகவியல் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு மாநிலத்திற்கு உபயோகமுள்ள, சமூக பயன்பாடுள்ள திட்டங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் **2014–2015**ம் ஆண்டில் ரூ.**35.00** இலட்சங்கள் செலவில் **15** ஆய்வுத்திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது. **2015–2016**ம் ஆண்டில் ரூ.**35.00** இலட்சங்கள்

செலவில் 15 ஆய்வுத் திட்டங்களுடன் இத்திட்டத்தை தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 10.4 இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

தமிழகத்தில் ஒன்பதாம் வகுப்பு பயின்று வரும் இளம் மாணவ மாணவியர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி எடுத்துக்கூறி அறிவியல் மற்றும் ஆய்வுத் துறையை தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு புகழ் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் 15 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த தொடர் திட்டத்தில் 2014–2015ல் ரூ.30.00 இலட்சங்கள் செலவில் 20 மாவட்டங்களில் 800 மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் மேலும் ரூ.15.00 இலட்சங்கள் செலவில் 10

மாவட்டங்களில் 15 நாட்கள் பயிற்சியுடன் இத்திட்டம் தொடரப்படும்.

## 10.5. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, அவர்களை வெளிமாநிலத்திலுள்ள, பல்கலைக்கழகங்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்துவது தான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி அவர்களுக்கு தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக ஆதரவு ஊதியம் இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும்.

2014–2015ம் ஆண்டில் ரூ.3.00 இலட்சங்கள் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது . இத்திட்டம் 2015–2016ம் ஆண்டில் ரூ.3.00 இலட்சங்கள் செலவில் ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

### 10.6. கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு ஒரு பகுதி நிதியுதவி அளித்தல்

அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்குகள், சூழியங்கள், அறிவியல் முகாம்கள் நடத்த இத்திட்டம் வழிவகுக்கிறது. 2014–2015ம் ஆண்டில் 50 கருத்தரங்களுக்கு ரூ.10.00 இலட்சங்கள் செலவில் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் இத்திட்டம் மூலம் ரூ.10.00 இலட்சங்கள் செலவில் மேலும் 40 கருத்தரங்குகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

## 10.7. அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் போன்ற அனைத்து தரப்பினருக்கும் பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் மூலம் அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

2014–15ல் ரூபாய் 7.50 இலட்சங்கள் செலவில் 50 நிறுவனங்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த நிதியுதவி அளிக்கப்பட்டது. 2015–2016–ம் நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூபாய் 7.50 இலட்சங்கள் செலவில் மேலும் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

## 10.8. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதிஉதவி அளித்தல்

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகள்/ ஆராய்ச்சி மையங்களில் பணி புரிந்து வரும் 40 வயதுக்கு கீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்லுவதற்குத் தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2014–2015ம் ஆண்டில் ஆய்வாளர்களுக்கு ரூ.2.50 இலட்சங்கள் செலவில் உதவி அளிக்கப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் மேலும் ரூ.2.50 இலட்சங்கள் செலவில் ஆய்வாளர்களுக்கு நிதியுதவி செய்யப்படும்.

## 10.9. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர்வதே திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் அறிவியல் தொழில்நுட்ப பயன்கள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே சென்றடையும். 2014–2015ம் ஆண்டில் ரூ.0.50 இலட்சங்கள் செலவில் அறிவியல் வெளியீடுகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. 2015–2016ம் ஆண்டில் ரூ.0.50 இலட்சம் செலவில் அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

## 10.10. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

தமிழகத்தின் சிறந்த அறிவியலறிஞர்களுக்கு தமிழக அறிவியலறிஞர்கள் என்ற பெயரில் விருதுகள் வழங்கி அவர்களை ஊக்குவித்து பெருமைபடுத்துவதற்காக இத்திட்டத்தின் கீழ் 1) வேளாண்மை 2) உயிரியல் 3) வேதியியல் 4)

பொறியியல் தொழில் நுட்பம் 5) சுற்றுப்புறச் சூழலியல் 6) மருத்துவம் 7) கணிதவியல் 8) இயற்பியல் 9) சமூகவியல் 10) கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய துறையில் அவர்களுடைய செயல்திறமை மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அறிவியலறிஞருக்கும் ரூ 50,000/– ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படும். ஆண்டுதோறும் நமது ஆய்வாளர்கள் ரூ.7.00 இலட்சங்கள் செலவில் கௌரவிக்கப்படுகின்றனர். இத்திட்டம் 2015–2016ம் ஆண்டில் ரூ.7.00 இலட்சங்கள் செலவில் தொடரப்படும்.

## 10.11. அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

கல்வி நிறுவனங்கள் மூலம்அறிவியல் விழிப்புணர்வை கிராமப்புற மாணவ மாணவியர்கள், விவசாயிகள் மற்றும் சுயஉதவி குழுக்களின் உறுப்பினர்களிடையே ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2014–2015ல் ரூபாய் 6.50 இலட்சங்கள் செலவில் பத்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் ரூ.6.50 இலட்சங்கள் செலவில் மேலும் 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10.12. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

பள்ளி ஆசிரியர்களை பயிற்றுவிப்பதன் மூலம் கிராமப்புற பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் அறிவியல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அறிவியல் பாடங்களை நடத்தும் ஆசிரியர்கள் தங்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த தரமான பரிசோதனைக் கூடங்கள் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 5 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் **2014–2015** ம் ஆண்டில் ரூ.**9.00** இலட்சங்கள் செலவில் **10** மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. **2015–2016**ம் ஆண்டில் ரூ.**9.00** இலட்சங்கள் செலவில் மேலும் **10** மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10.13. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

நமது மாநிலத்திலுள்ள மத்திய, மாநில கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களில் வெளிக்கொணரப்படும் புதிய பயனுள்ள தொழில்நுட்பங்களை கல்வி மற்றும் அறிவியலாளர்கள் மூலம் உரிய பயனாளிகளுக்கு

விரைவில் எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் இத்திட்டத்தின் வாயிலாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. **2014–2015**ல் ரூ.**9.00** இலட்சங்கள் செலவில் **18** பயிற்சிகள் நடத்தப்பட்டது. இத்திட்டத்தில் **2015–2016**ம் ஆண்டில் ரூ.**9.00** இலட்சங்கள் செலவில் மேலும் **18** பயிற்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 10.14. கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில் நுட்பங்களின் பயன்பாடு

அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பயன்களை குறிப்பிட்ட தேர்வு செய்யப்பட்ட கிராமப்புற மக்களுக்கு கொண்டு சேர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் **2014–2015**ம் ஆண்டில் ரூ.**10.00** இலட்சங்கள் செலவில் **10** மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. **2015–2016**ம் ஆண்டில் ரூ.**10.00** இலட்சங்கள்

செலவில் மேலும் 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10.15. தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில் நுட்ப திறன் வளர்த்தல்

பட்டதாரிகளின் திறமைகளை தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்த பயிற்சி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில்துறை மற்றும் கல்லூரிகள் (தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட) இணைந்து இப்பயிற்சியினை அளிக்கின்றது. இத்திட்டம் 2014–2015ம் ஆண்டில் ரூ.10.00 இலட்சங்கள் செலவில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் ரூ.10.00 இலட்சங்கள் செலவில் மேலும் 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**10.16. கல்லூரிகளின் ஆய்வு மாணவ மாணவியர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக் குறையை களையும் திட்டம்**

இத்திட்டத்தின்மூலம் கல்லூரிகள் அளவில் நல்ல ஆய்வு முயற்சிகள் ஊக்குவிக்கப்படுவதோடு அறிவியல் ஆய்வு மாணவ மாணவியர்களின் ஆய்வுத் திறமை மற்றும் ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்படுகிறது. திறமையான கல்லூரி மாணவ மாணவியர்கள் தங்களது சிறந்த ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள நிதிப்பற்றாக்குறை ஒரு தடையாக இருக்க கூடாது. எனவே, கல்லூரி ஆய்வு மாணவ மாணவியர்களின் நல்ல ஆய்வுத் திட்ட வரைவுகளை நமது கல்லூரிகளிலிருந்து பெற்று அவற்றுள் சிறந்ததாக நிபுணர்களால் தேர்வு செய்யப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 2014–2015ல் ரூ.15.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2015–2016ம் ஆண்டில் இத்திட்டத்தின் அடுத்த

பகுதியாக ரூ.15.00 இலட்சங்கள் செலவில் ஆய்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

### 10.17. அரசு அறிவியல் கல்லூரிகளின் ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்

உயர் கல்வித் துறையில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்துவது நமது அரசின் கொள்கை. நமது அறிவியல் ஆய்வு கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் நமது உயர்கல்வி மாணவர்களின் ஆய்வுத்திறனை மேம்படுத்தி நல்ல வேலை வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தலாம். அரசு அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக் கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டும். எனவே நமது மன்றத்தின் வாயிலாக 2014–2015 ல் ஆய்வுக் கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.30.00 இலட்சங்கள் செலவில் அரசு அறிவியல்

கல்லூரிகள் தேர்வு செய்யப்பட்டது. 2015–2016ல் ரூ.20.00 இலட்சங்கள் செலவில் இத்திட்டம் தொடரப்படும்.

## 11. தமிழ் நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மன்றம்

### 11.1 மன்றத்தின் சுருக்க வரலாறு :

தொழில் நுட்பக் கல்வியில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கல்லூரிகளின் தரத்தினை ஒருங்கிணைத்து நிர்ணயிக்கவும் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு தொழில் நுட்பக் பல்கலைக் கழகம், கல்லூரிகளின் தொழில் நுட்பக் கல்வி மேம்பாடு திட்டங்களை பல்கலைக் கழகங்களின் மானியக் குழு மற்றும் அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி மன்றம் ஆகியவற்றுக்கு மேலனுப்பவும் 2010 ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டப்பேரவை சட்டத்தின்படி, தமிழ் நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மன்றம் நிறுவப்பட்டது.

### 11.2 2014–15ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:–

- ஆங்கிலம் போதிப்பதில் இன்றைய காலத்தில் கலப்பினச் சொற்பயன்பாடு குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்று

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக பேராசிரியரைக் கொண்டு அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் தொழில் நுட்பக் கல்வி தர மேம்பாடு திட்டத்தின் “டெக்விப்” அலுவலர்களின் உறுதுணையுடனும் **2014** நவம்பர் திங்கள் இரண்டாம் வாரத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

- **2010**ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநில தொழில் நுட்பக் கல்விச் சட்டத்தின் குறிக்கோள்களில் குறிப்பிட்டுள்ளபடி, அரசுக்கு தொழில் நுட்ப உயர்கல்விக் கொள்கை முடிவுகள், உயர்கல்வி பரப்பில் அளவீடு குறித்தும் அவ்வப்போது தேவையான குறிப்புகள் அளிக்கப்பட்டது.

## 11.3 2015–16 இல் மேற்கொள்ளப்பட விருக்கும் நடவடிக்கைகள்

- தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சி மற்றும் சவால்களை உள்ளடக்கும் வண்ணம்

தொழில் நுட்பக் கல்வியின் பாடத்திட்டத்தை புத்தாக்கமும் மேம்பாடும் செய்து மறுசீரமைக்கும் வகையில் ஒரு உப குழுவை உருவாக்குதல்.

- தொழில் நுட்பக் கல்வியின் முனைப்பான பாடப் பிரிவுகளில் கருத்தரங்குகள் / பட்டறைகள் நடத்தவும், மேலும் கருத்தரங்குகள், பட்டறைகள், ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல்.

## 12. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**12.1** தமிழ்நாடு மாநில உருது கழகம் 21.7.2000 அன்று தொடங்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் 20 கல்லூரிகளில் உருது மொழி பாடப்பிரிவுகளும், 5 கல்லூரிகளில் அரபு மொழி பாடப்பிரிவுகளும் நடத்தப்படுகிறது.

### 12.2 சாதனைகள்

தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து அகில இந்திய அளவில் தமிழ்நாடு மாநில உருது கழகத்தால் கவியரங்கம் நடத்தப்படுகிறது.

- ‘டாக்டர் அப்துல் ஹக்’ இலக்கிய பரிசு மற்றும் பரிசுத்தொகை தலா ரூ.25,000/– வீதம் ஆறு கவிஞர்களுக்கு பொதுமக்கள் பங்கேற்ற

விழாவில் வழங்கப்பட்டது. மேலும், உருது மொழி வழியாக தேர்வுகளில் மாநில அளவில் இடம் பிடித்த மாணவர்களுக்கு தகுதிப் பரிசு மற்றும் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**பி.பழனியப்பன்**
**உயர்கல்வித்துறை அமைச்சர்**

## அமைப்பு முறை வரைபடம்

- முதலமைச்சர்
  - அமைச்சர் (உயர்கல்வி)
    - தலைமைச் செயலாளர்
      - செயலாளர் (உயர்கல்வி)
        - துறைகள்
          - தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
          - கல்லூரிக் கல்வி இயக்ககம்
          - தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
          - தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
          - மாநில திட்ட இயக்குநரகம்<br>தேசிய உயர்கல்வி வளர்ச்சி திட்டம் (RUSA)
          - அறிவியல் நகரம்
          - தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
          - தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநில மன்றம்
          - தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்
          - தமிழ்நாடு மாநில உருது கழகம்
        - பல்கலைக்கழகங்கள்
          - அண்ணா பல்கலைக்கழகம்
          - தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
          - தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம்
          - சென்னை பல்கலைக்கழகம்
          - மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
          - பாரதியார் பல்கலைக்கழகம்
          - பாரதிதாசன் பல்கலைக்கழகம்
          - அழகப்பா பல்கலைக்கழகம்
          - அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
          - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
          - பெரியார் பல்கலைக்கழகம்
          - திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
          - அண்ணாமலை பல்கலைக்கழகம்

## கல்லூரிக் கல்வி

## 2014 – 15ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை

| கல்லூரிகளின் வகைகள் | அரசு கல்லூரிகள் | அரசு உதவிபெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 76 | 139 | 448 | 663 |
| உடற்கல்வி கல்லூரிகள் | 0 | 3 | 8 | 11 |
| கீழ்திசைக் கல்லூரிகள் | 0 | 4 | 0 | 4 |
| சமூகப் பணி கல்லூரிகள் | 0 | 2 | 0 | 2 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 651 | 672 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 37 | 0 | 0 | 37 |
| மொத்தம் | 120 | 162 | 1107 | 1389 |

# கல்லூரிக் கல்வி
# 2014 – 15ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை

| கல்லூரிகள் வகைகள் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | | | | | | மாணவர் சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வி இயல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வி இயல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 59002 | 13701 | 2560 | 1278 | 750 | 77291 | 58829 | 13674 | 2513 | 1207 | 750 | 76973 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 107006 | 22030 | 2842 | 2001 | 491 | 134370 | 92099 | 22015 | 2807 | 2001 | 491 | 119413 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 8900 | 352 | 0 | 0 | 0 | 9252 | 8894 | 349 | 0 | 0 | 0 | 9243 |
| சுயநிதி கல்லூரிகள் | 118166 | 27435 | 1310 | 66590 | 277 | 213778 | 99128 | 16927 | 1308 | 65648 | 277 | 183288 |
| மொத்தம் | 293074 | 63518 | 6712 | 69869 | 1518 | 434691 | 258950 | 52965 | 6628 | 68856 | 1518 | 388917 |

# தொழில்நுட்பக் கல்வி

## 2014 –15 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணவர்கள் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த மாணவர்கள் சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு ப.தொ. கல்லூரிகள் – (முறையான) | 41 | 11735 | 103 | 28 | 2924 | 881 | 352 | 50 | 2559 | 515 | 1792 | 555 | 260 | 107 | 75 | 19 | 8065 | 2155 | 10220 |
| அரசு ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (14 கல்லூரிகள்) | * | 3420 | 58 | 2 | 1078 | 60 | 130 | 7 | 722 | 43 | 502 | 62 | 71 | 0 | 34 | 0 | 2595 | 174 | 2769 |
| அரசு உதவி பெறும் ப.தொ. கல்லூரிகள் (முறையான) | 34 | 15229 | 378 | 49 | 4519 | 604 | 591 | 50 | 2519 | 299 | 1455 | 244 | 230 | 52 | 37 | 5 | 9729 | 1303 | 11032 |
| அரசு உதவி பெறும் ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (2 கல்லூரிகள்) | * | 240 | 10 | 0 | 112 | 1 | 12 | 1 | 34 | 1 | 18 | 0 | 1 | 0 | 1 | 0 | 188 | 3 | 191 |
| பொறியியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் பட்டயநிலை வகுப்புகள் (4 கல்லூரிகள்) | * | 600 | 145 | 43 | 67 | 12 | 1 | 0 | 16 | 1 | 135 | 12 | 8 | 0 | 0 | 0 | 372 | 68 | 440 |
| இணைப்புப் பயிலகங்கள் | 5 | 349 | 20 | 0 | 97 | 0 | 7 | 0 | 90 | 1 | 72 | 4 | 9 | 0 | 2 | 0 | 297 | 5 | 302 |
| உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப பயிலகங்கள் | 15 | 1050 | 8 | 0 | 51 | 1 | 7 | 0 | 35 | 1 | 30 | 0 | 0 | 0 | 0 | 0 | 131 | 2 | 133 |
| சுயநிதி ப.தொ. கல்லூரிகள் – (முறையான) | 414 | 178154 | 7017 | 640 | 27501 | 1887 | 3734 | 115 | 21970 | 1223 | 17460 | 1958 | 1208 | 162 | 518 | 71 | 79408 | 6056 | 85464 |
| சுயநிதி ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (9 கல்லூரிகள்) | * | 1080 | 8 | 0 | 230 | 2 | 27 | 0 | 264 | 0 | 119 | 0 | 4 | 0 | 2 | 0 | 654 | 2 | 656 |
| மொத்தம் | 509 | 211857 | 7747 | 762 | 36579 | 3448 | 4861 | 223 | 28209 | 2084 | 21583 | 2835 | 1791 | 321 | 669 | 95 | 101439 | 9768 | 111207 |

(*) பட்டயநிலை வகுப்புகள் சுழற்சி முறையில் 25 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் (14 அரசு, 2 அரசு உதவி பெறும் மற்றும் 9 சுயநிதி கல்லூரிகள்) மற்றும் 4 பொறியியல் கல்லூரிகளிலும் நடத்தப்படுகின்றன.

# தொழில்நுட்பக் கல்வி

## 2014 – 15 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணவர்கள் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த மாணவர்கள் சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு பொறியியல் கல்லூரிகள் | 10 | 3760 | 78 | 61 | 934 | 668 | 83 | 45 | 511 | 353 | 262 | 206 | 57 | 35 | 30 | 8 | 1955 | 1376 | 3331 |
| அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 | 2880 | 229 | 130 | 902 | 633 | 54 | 26 | 316 | 205 | 177 | 137 | 40 | 21 | 15 | 3 | 1733 | 1155 | 2888 |
| சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 546 | 278862 | 12010 | 4856 | 44304 | 25401 | 4988 | 1549 | 22931 | 9852 | 16186 | 8807 | 1670 | 960 | 540 | 211 | 102629 | 51636 | 154265 |
| அண்ணா பல்கலைக்கழகம் (உறுப்புக் கல்லூரிகள்) | 17 | 8220 | 178 | 167 | 1559 | 1416 | 192 | 103 | 966 | 779 | 515 | 481 | 114 | 72 | 35 | 21 | 3559 | 3039 | 6598 |
| மொத்தம் | 576 | 293722 | 12495 | 5214 | 47699 | 28118 | 5317 | 1723 | 24724 | 11189 | 17140 | 9631 | 1881 | 1088 | 620 | 243 | 109876 | 57206 | 167082 |

# பல்கலைக்கழகங்கள்

## பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 2014–15


| வ.எண் | பல்கலைக்கழகங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 1056 | 1286 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம் | 19670 | 10543 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. | 524 | 465 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 830 | 1052 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 1224 | 1726 |
| 6 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | - | 1921 |
| 7 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 713 | 1633 |
| 8 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 325 | 717 |
| 9 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம். | 609 | 912 |
| 10 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். | 203 | 277 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை. | 108 | 77 |
| 12 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை. | 43 | 24 |
| 13 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. | 8877 | 5808 |
| மொத்தம் | | 34,182 | 26,441 |
| பெரு மொத்தம் | | 60,623 | |

## பல்கலைக்கழகங்கள்

# தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 2014–15


| வ.எண் | பல்கலைக்கழகங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 35268 | 46421 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம் | 49044 | 63835 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. | 34964 | 28872 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 4799 | 5804 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்துார் | 44597 | 42018 |
| 6 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | - | 1310 |
| 7 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 40858 | 44421 |
| 8 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 13873 | 14074 |
| 9 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம். | 1825 | 2675 |
| 10 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். | 181 | 335 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை. | 11052 | 10061 |
| 12 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை. | - | - |
| 13 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. | 2218 | 2011 |
| மொத்தம் | | 2,38,679 | 2,61,837 |
| பெரு மொத்தம் | | 5,00,516 | |

## கல்லூரிக் கல்வி
## 2014 – 15ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை




## கல்லூரிக் கல்வி

## 2014 – 15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை




## தொழில்நுட்பக் கல்வி

### 2014 – 15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை




## தொழில்நுட்பக் கல்வி

## 2014 – 15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை



## தொழில்நுட்பக் கல்வி
## 2014 – 15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை



## தொழில்நுட்பக் கல்வி

## 2014 – 15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை

